தென்மொழி

சுவடி : 22

ஓலை : 10

விலை உருபா 1-25

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

அடடா, ஓ! அடுத்தது, நம் ஆட்சி இங்கே!

இன்றில்லை, நேற்றில்லை,
ஈராயிரத்தாண்டாய்
வடவரை நாம்
எதிர்க்கின்றோம், எதிர்க்கின்றோமே
ஒன்றில்லை, இரண்டில்லை;
ஒவ்வொன்றாய்ப் படிப்படியாய்
உரிமையை, நாம்
உதிர்க்கின்றோம், உதிர்க்கின்றோமே
நன்றில்லை, தீதுமில்லை -
எனவே நாம் இருப்பதுவே
நலமென்று
நாயினமாய் நலிகின்றோமே!
வென்றில்லை, தோற்றுமில்லை;
வீணுக்கு வீரரென்று
வாய்வீரம்
விளக்கின்றோம் விளக்கின்றோமே!

எதிரிகளை விட, நமக்குள்
இரண்டகர்கள் மிக அதிகம்!
எனவே, நம்
எழுச்சியிலே தொய்வுண்டிங்கே!
உதிரிகளை - வஞ்சர்களை -
எதிர்க்குக குரல் கொடுத்துத்
துணைபோகும்
உலுத்தரை, நாம் ஒழித்தல் வேண்டு
சதிராடும் களத்தினிலே
போரெழுச்சி தோன்றுது!
கலை, காமக்
கயவரையும் சாய்த்தல் வேண்டும்!
அதிராமல் குரல்கொடுப்போம்;
அடங்காமல் ஆர்த்தெழுவோம்;
அடடா, ஓ!
அடுத்தது, நம் ஆட்சி - இங்கே!

நமக்கு வந்த மடல்கள்.

0:1157: (ஆசிரியர் குறிப்பு; வெங்காலூர் திரு. அருள்மணி அவர்கள் தொடக்கக் காலம் முதல் உறைத்த தென்மொழி அன்பர். ஆசிரியர் பால் உண்மை அன்பும் மதிப்பும் கொண்டு விளங்கியவர்; விளங்குபவர். தென்மொழிக்குப் பலவாறு துணைநின்றவர். இவருடைய மடல்கள் சில தென்மொழியில் வெளிவந்துள்ளன. அப்படிப்பட்டவர், 1968-இல் ஒரு முறை, கடலூரில் இருந்த தென்மொழி இல்லத்திற்கு வந்து ஒரு நாள் தங்கியிருந்து பின் எங்கோ சென்று வருவதாகக் கூறிச் சென்றவர், திசை திருப்பிகள் சிலரின் பேச்சைக் கேட்டுப் பிறகு வீடு வராமலேயே வெங்காலூர் திரும்பிப்போய், **''தமிழால் பிழைக்கும் திருட்டுப் பாவலனே! ஒன்று செய்; செத்தொழி! அந்த மானமேனும் இருக்கிறதா?''** என்று கடுமடல் ஒன்று எழுதினர். அம்மடல் தென்மொழிச் சுவடி 6, ஓலை 8 இல் முதல் மடலாக வெளியிடப்பெற்றது.

அன்று (1968)-லிருந்து, பின்னர் அவர் நம்முடன் கொண்ட தொடர்பு நின்றது. 18 ஆண்டுகளுக்குப்பின் அண்மையில் (கடந்த மாத இறுதியில்) திரு. அருள்மணி, அவர் மனைவியின் மருத்துவத்திற்காகக் குடும்பத்துடன் நம் இல்லத்திற்கு வந்து ஒரு கிழமை இருந்து சென்றார். அக்கால் (21-8-86-இல்) அவர் நமக்கு விடுத்த மடல் இங்குக் கீழே வெளியிடுகிறோம்.

காலம் எவ்வளவு வலியது! எப்படிப்பட்ட ஒருவரையும் எவ்வாறு மாற்றுகிறது; பின் எந்த அளவில் உணரச் செய்கிறது என்பதற்கு இம் மடல் ஓர் எடுத்துக்காட்டு. நம் வாழ்க்கை வரலாற்றில் இது குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சியாக இருக்கட்டும்!

--ஆசிரியர்.)

பேரன்பிற்குரிய ஐயா, வணக்கம். ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பு தங்களைக் கண்மூடித்தனமான முறையில் தாக்கிய என்னையும், அதன் பின் தாக்கியும், தூற்றியும் எழுதி வரும் அன்பர்களையும் வெறுப்பின் வெம்மை படாது, விருப்பின் குளிர்மையுடன் காணும் தங்கள் நோக்கினை எண்ணும்பொழுது புகழையும் இகழையும் பொருட்படுத்தாது, இலக்கு நோக்கி நடையிடும் அரிமாவோ தாங்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

குணம் நாடாது, குற்றமே நாடிடும் அன்பர்களின் தாக்குதலைக் கல் குண்டுகள் போன்று எண்ணாது, பூச்செண்டுகள் போன்று எண்ணிப் பூரிப்புக் காட்டும் தங்களின் பொறுமையை எண்ணும்பொழுது, திருக்குறளில் 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை' என்னும் குறள் தங்களுக்கென்றே எழுதப் பட்டதோ என எண்ணி எண்ணி வியப்புறுகின்றேன். 'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் அன்றோ?'

சான்றோய்! அன்று கடலூரில் தங்களைக் கண்டபொழுது இருந்த அதே நிலை-வாழ்வு-உழைப்பு-வறுமை, அதில் ஒரு பெருமை- இன்று சென்னையில் கண்டபொழுதும் மாறாது-மறையாது-அசையாது அகலாது இருத்தலைக் காண்கிறேன்.

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம் பார்க்க)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவணம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ. (தொலைபேசி : 847829)

(பெயரில்லாப் படைப்புகள் பொறுப்பாசிரியர் எழுதுவன.)

சுவடி 22] உலகை மடங்கல் (செப்-அக்-1986) [ஓலை 10

இந்தித் திணிப்பும் இராசீவின் உறுதிமொழியும்!



இந்தியெதிர்ப்புப் போராட்டம் இந்தியாவில் தமிழகத்தைவிட வேறு எங்குமே நடப்பதில்லை. அதற்குக் காரணம், தமிழைத் தவிர இந்தியாவின் வேறு எந்த மொழியும் சமசுக்கிருதக் கலவைமொழியே. சமசுக்கிருதத்துடனோ, அல்லது வேறு எந்த மொழியுடனோ, ஒரு தொடர்பும் கொள்ளாமல் அந்த மொழிகள் உயிர் வாழ முடியாது.

தமிழ் ஒன்று மட்டுமே பிற எந்த மொழியினது தொடர்பு இன்றியும் இயங்க முடியும். மொழியளவில் மட்டுமில்லை; கலை, பண்பாடு இலக்கியம், இலக்கணம் முதலிய அறிவியல் வாழ்வியல் கூறுகளிலும் தமிழும் தமிழினமும், தனி! ஆரியமும், ஆரிய இனமும் தனி! இடைக்காலத்தில் ஆரியத்தால், தமிழும் தமிழினமும் பெற்ற தாக்கத்தினின்றும், அடிமைத்தனத்தினின்றும் இழிவுகளினின்றும் மீண்டு கொள்வதற்கான முயற்சிகளே இன்று பல முனைகளிலும் தமிழர் போராட்டங்களாக வடிவெடுக்கின்றன. அப்போராட்டங்களில் ஒன்றே கடந்த 50, 60 ஆண்டுகளாகத் தொடர்ந்தும், அவ்வப்பொழுதும் நடந்துவரும் இந்தியெதிர்ப்புப் போராட்டம்.

ஆரியப் பார்ப்பனர்கள் இந்திப் போராட்டத்தை என்றுமே ஆதரிப்பதில்லை. ஏனெனில் இந்தி பெரும்பாலும் சமசுக்கிருதத்தால் உயிர் வாழ்கின்ற ஒரு மொழி. சமசுக்கிருதம் இல்லையேல் இந்தி இல்லை. சமசுக்கிருதத்தையோ நேரடியாக மக்கள் வழக்கு மொழியாகக் கொண்டு வரமுடியாது. ஏனெனில், அதற்கு அந்தத் தகுதி முழுவதுமாகவே இல்லை. காரணம் அஃது ஒரு செயற்கை மொழி. ஆனாலும், சமசுக்கிருதம் அவ்வாறு இந்தியாவின் பொது மொழியாகவோ, மக்கள் தொடர்பு மொழியாகவோ வரமுடியாத நிலையில், அம் மொழியுடன் மிகவும் உறவுள்ள இந்தியாவது அவ்விடத்தில் வரட்டுமே என்பதில் பார்ப்பனர்களுக்கு அக்கறையும், ஆர்வமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறையவே உண்டு. இதற்கேற்பவே இந்திக்கு முதன்மை கொடுத்து, இந்திய அரசின் அமைப்பியல் சட்டத்தை எழுதி வைத்துக் கொண்டனர். இந்த நிலை, காசுமீரத்திலுள்ள பார்ப்பனனுக்கும் சரி-கன்னியாகுமரியிலுள்ள பார்ப்பனனுக்கும் சரி, ஒரே மாதிரியாகவே உள்ளது. எனவேதான், பார்ப்பனர்கள் இந்தியை எதிர்ப்பதுமில்லை; அவ்விந்தியெதிர்ப்புக்கு ஆதரவு தருவதுமில்லை. நிலைமை மீறிப்போகும் என்னும் ஒரு நிலை ஏற்படுமானால் மட்டுமே, இந்தித் திணிப்பைக் கண்டிப்பது போல நயன்மை பேசுவார்கள்; ஒப்புரவுக்கு வருவார்கள். இந்த வகையில் அவர்களுக்குப் பெரிதும் உடந்தையாக இருப்பவர்கள் நம் இனத்தைக் காட்டிக் கொடுத்தே பிழைப்பு நடத்துகின்ற **விபீடண, சுக்கிரீவ, பிரகலாத, சுப்பிரமணிய, பக்தவத்சல, வையாபுரிய, மீனாட்சிசுந்தர, கண்ணதாச, மூப்பனிய, சிதம்பரப் பழனியாண்டிகளே!** இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் என்றென்றும் தமிழினத்தில் முளைத்துக் கொண்டும் தொடர்ந்து இரண்டகம் செய்து வயிறு கழுவிக் கொண்டும் இருப்பதாலேயே இவ்வேதுங்கெட்ட தமிழினம் தன்னை மீட்டுக் கொள்ளவும் அடிமை நீக்கம் செய்து கொள்ளவும் நிலைப்படுத்திக் கொள்ளவும் அரும்பாடு படவேண்டியிருக்கிறது.

இனி, இந்தியெதிர்ப்புப் போராட்டத்தைத் தந்தை பெரியாரைவிட யாரும் அத்துணை தீவிரமாகவும் முடுக்கமாகவும், தொடர்ந்தும் நடத்திவிட முடியாது. எனினும், இஃது ஒரு தொடர் போராட்ட

மாகவே கடந்த முக்கால் நூற்றுண்டுக் காலமாக நடந்து வருவதும் அஃது இறுதியில் நம்மினக் காட்டிக் கொடுப்பான்களாலேயே தளர்வுறுவதுமே வாடிக்கையாகி விட்டது.

இந்த வகையிலேயே **1965** இந்தியெதிர்ப்புப் போராட்டத்தையும், நம் மிகுபுகழ், வீடண பக்தவத்சலம் நம்மையெல்லாம் சிறைப்படுத்தி நேருவின் **'இரும்புக் கை'** யராகவும் **'பாறை நெஞ்சினரா'** கவும் நடந்து கொண்டு, முறியடித்து, நல்ல பெயரெடுத்துக் கொண்டார். இக்கால் அதே பாணியில் - இந்திராப் பேராயம் ஆட்சியில் இல்லாத காரணத்தால், மூப்பன்களும், பழனியாண்டிகளும் அவ்விரண்டகக் காட்டிக் கொடுப்பு வேலையைச் செய்து கொண்டு நலந்தேடி வருகின்றனர்.

அந்த நிலையில்தான் இப்பொழுது கிளர்ந்துள்ள இந்த இந்திப் போராட்டத்தையும் வடநாட்டு வல்லாண்மையர்கள் முறியடித்து இந்தியை நிலையாக நாட்டிவிடப் பார்க்கிறார்கள். அதற்கிசைவாகப் போராட்டம் தொடங்கியதும், அதை மறைமுகமாக வலுக்குறைக்கும் அறிக்கைகள் கொடுப்பதும், அவற்றுக்குப் பச்சைப் பார்ப்பன இதழ்களான இந்து, தினமணி முதலிய இதழ்கள் ஆதரித்து வெளிச்சம் போட்டுக் காட்டுவதும் நடந்து வருகின்றன. இறுதியில், இங்கிருந்து இந்திராப் பேராயக் கட்சியின் இரண்டகர்களான மூப்பன், பழனியாண்டி, தங்கபாலன், சாரம் போன நடிகை வைசெயந்திமாலா முதலிய கழிசடைகள் இராசீவிடம் தூது போவது போல் போனதும், அவர்களிடம் நம் அறக்கொடிய வல்லாண்மையாளர் இராசீவ் தம் பாட்டனும், தாயும் கொடுத்த அதே உறுதிமொழியை உதிர்த்து, மாணவர்களின் எழுச்சியை அடக்க முயற்சி செய்ததும் நடந்து முடிந்திருக்கும் நாடகங்களாகும்!

இந்தித் திணிப்பில் நேருவின் உறுதிமொழி என்பது ஒன்றுக்கும் பற்றாத உப்புச்சப்பற்ற கரவான, பொய்யான, மறைமுகக் கொடுமையான ஓர் உரையாகும். ஏனோ தெரியவில்லை இதையே அவ்வப்பொழுது எடுத்து வைத்துக் கொண்டு நம்ம ஊர் சாரம் போன அரசியல் தலைவர்களும் வடவர்களிடம் பேரம் பேசி வருவது, வெட்கக் கேடானதும், அறிவு கெட்டதுமான ஒரு நடவடிக்கை ஆகும் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஊசலாடி வருகிறார்கள். அல்லது தெரிந்து கொண்டே, அறிந்தோ அறியாமலோ தம்மைப் பின்பற்றும் இலக்கக்கணக்கான தமிழ் இன நலத் தொண்டர்களை ஏமாற்றி வருகிறார்கள்.

அப்படி என்ன இந்தித் திணிப்பு நடவடிக்கையில் நேருவின் உறுதிமொழி கற்காரையை (கான்கிரீட்டை)ப் போல் அவ்வளவு உறுதியானது என்பது நமக்குத் தெரியவில்லை. அதில் தமிழினத்துக்கு எந்த ஒரு வகையான உறுதியும் இல்லை; ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை என்பது எல்லோருக்குமே வெளிப்படையானது. அஃது,

"இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் அரசுத் தொடர்பு மொழியாக இருக்கும்" என்பது. இதில் என்ன உறுதியிருக்கிறது?

இந்தி பேசாத மக்களின் விருப்பத்தை எப்படி அறிவது? எந்தக் கொம்பன் அதற்குக் கட்டியங் கூறுவது? எவனுவது நம் மூப்பனைப் போலவோ, பழனியாண்டியைப போலவோ வீடணன் பிரகலாதன் போல ஒருவனைத் தூண்டித் **'தமிழக மக்கள் பரவலாக இந்தி படிக்க விரும்புகிறார்கள்'** என்று சொல்லச்சொன்னால், இந்த மண்ணாங்கட்டி உறுதிமொழி என்னுவது?

மேலும், நேரு முதல் இராசீவ் வரை, இதுபோலும் இந்திக் கிளர்ச்சியின்பொழுது, சொல்லுகிற உரை ஒரேமாதிரியான பொறுப்பற்றதும், உண்மையற்றதும், கரவானதுமான உரையாகவே இருக்கிறதை நாம் அறியாதவர்களா?

இந்தியை மேலும் மேலும் எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் நாளொரு முயற்சியாகவும், பொழுதொரு செயலாகவும், தொலைக்காட்சி, வானொலி முதலிய ஆற்றல் வாய்ந்த பொதுமக்கள் தொடர்புக் குகந்த அறிவியல் கருவிகள் தங்கள் கைகளில் கிடைத்ததென்னும் இறுமாப்பில்-செருக்கில்-அகங்காரத்தில் - இந்தியெனும் நச்சுணர்வைக் கொஞ்சங் கொஞ்சமாக மக்களின் மூளைகளிலும், நெஞ்சங்களிலும் படிப்படியாகப் படியச்செய்து கொண்டே, இந்த நாட்டின் தலைமையமைச்சுப் பொறுப்பில் உள்ள இராசீவ் சொல்லுகிறார், **"இந்தியை இந்தி பேசாத மக்கள்மேல், திணிப்பதென்னும் பேச்சுக்கே இடமில்லை'** என்று. இஃது எவ்வளவு பெரிய பொய்!

வானொலியில், தொலைக்காட்சியில், இந்திப் பாடல்கள், விளம்பரக்காரர்கள் நிகழ்ச்சி என்னும் பெயரால், இந்தித்தொடர் நிகழ்ச்சிகள், நாடகங்கள், பாடல்கள், செய்திகள், பிற விளையாட்டுக் கூத்துகள், விளம்பரங்கள்-என்னும் அனைத்தும் இந்தியெனும் மந்திமொழியில்தானே நடைபெறுகின்றன.

தொலைக்காட்சியில் பொதுவான நாள்களில் மொத்த 6 மணி நேர ஒளிபரப்பில் ஏறத்தாழ $3\frac{1}{2}$, 4 மணி நேரமும், விடுமுறை நாள்களில் மொத்தம் 12 மணி நேர ஒளிபரப்பில் ஏழத்தாழ 8 மணி; 9 மணி நேர ஒளி பரப்பும் இந்தியில்தானே! இவையெல்லாம் இந்தியை மறைமுகமாகத் திணிப்பதல்லாமல் வேறென்ன? அதுவும் இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் பார்ப்பனியப் பேச்சுகள், மானங்கெட்ட குடும்ப நடவடிக்கைகள், இழிதகைக் கலைகள், பண்பாடுகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் - ஆகியவைதாம், தேசியம் - ஒருமைப்பாடு என்னும் பெயரால் நடத்தப்பெறுகின்றன. இவற்றைக் கேட்கவோ-தடுக்கவோ யார் இருக்கிறார்கள் என்னும் மதப்பில்தானே வடநாட்டான்கள் நடந்து கொள்கிறார்கள்!

மேலும், இராசீவின் உறுதிமொழியின் இறுதியில் சொன்னது

பாவலரேறு நூல்களைச் சென்னைப் பல்கலைக் கழகமும்

இளங்கலை, முதுகலைப் பாட நூல்களாகத் தேர்வு செய்தது!

பாவலரேறு அவர்களின் தூய தமிழ் இன்சுவைப் பாவிய இலக்கியமான ***'ஐயை'*** என்னும் நூலைப் பாரதிதாசன் பல்கலைக் கழகம் இளங்கலைக்குப் பாட நூலாக முன்னமே தேர்ந்தெடுத்ததும், அது திருவையாறு புலவர் கல்லூரி, கரந்தைப் புலவர் கல்லூரி ஆகியவற்றிலும், சென்னை இலயோலாத் தனியார் கல்லூரியிலும் பாடமாக இருப்பதும் அனைவரும் அறிந்ததே!

இக்கால் சென்னைப் பல்கலைக் கழகமும் அண்மையில் ***'ஐயை'***-யைப் பாவியத்தை **இளங்கலை (B. A.)** - க்கும், ***'கொய்யாக்கனி'*** பாவியத்தை *முதுகலை* **(M.A.)** - க்கும் பாட நூல்களாகத் தெரிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் ***தென்மொழி, தமிழ்ச்சிட்டு*** இதழ்களையும், ***முது மெய்ம்ம* (M.Phill)** பட்ட ஆய்வுக்கு, முறையே, வெண்மாண் கொண்டான் திரு. ***மு. செல்வராசு*** அவர்களும், திருப்பூந்துருத்தி செல்வி: ***உரோசு மார்க்கரெட்*** அவர்களும் ஆராய்ச்சி நூல்களாக எடுத்துக் கொண்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்ன ? ***'மற்றபடி, இந்தியின் தேசியக் கொள்கையில் எவ்வகை மாற்றமும் இல்லை'*** என்பதுதானே! இஃது ஒன்றே போதாதா ? ***'நாங்கள் எப்பொழுதும் அப்படித்தான் செய்வோம்'*** என்பது தானே இதன் பொருள் ?

இதைக்கேட்ட பின்னும், நம் திராவிட இயக்க அமைச்சரான, மூலத்தனம் மாறாத(!) ***நெடுஞ்செழியனார்*** கூறுகிறார், ***'தலைமையமைச்சர் சொல்லுறுதியை ஏற்று மாணவர்கள் போராட்டத்தை நிறுத்தவேண்டும்'*** என்று!

அட, மானங்கெட்ட, மூளை கெட்ட அமைச்சர்களே! தலைமை அமைச்சர் ***சொல்லுறுதி*** (வாக்குறுதி) என்பது என்ன என்பது உங்களுக்கு விளங்கவில்லையா? பின் ஏன் இத்தமிழினத்தின் மான விடிவுக்குத் தடையிட்டுவிட்டு, உங்கள் வயிற்றிலிடும் சோற்றுக்காக இவ்வாறு மக்களை ஏமாற்றுகிறீர்கள் ? இனி, உங்களைச் சொல்லிப் பயனில்லை. உங்கள் ஆட்சியதிகாரங்களையும் மீறி, ஒருமுகமான மக்கள் எழுச்சி ஒன்று தோன்றினாலன்றி, ஆளும் வெறிகொண்ட நீங்களும், உங்களைச் சேர்ந்தவர்களும் இப்படித்தான் அடிவருடிக் கொண்டிருப்பீர்கள்! அந்த மக்கள் எழுச்சி நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை உங்களுக்கும் சரி; உங்களின் தில்லிக்கார ஆண்டைகளுக்கும் சரி, மிகக் கடுமையாக எச்சரித்துக் கூற விரும்புகிறோம். தனித் தமிழ்நாட்டு அரசு விரைவில் உருவாகட்டும்!

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு

உ.த.மு.க. சார்பில் திசம்பர் 27, 28-இல் சென்னையில் நடைபெறவிருக்கிறது!

உ. த. மு. க. வின் செயல் மேனிலைக் குழு, அண்மையில் தஞ்சையில் கூடி, வரும் திசம்பர் மாதம் 27, 28-ஆம் பக்கல்களில், சென்னையில் "தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு" என்னும் பெயரில், மிகப்பெரிய அளவில் ஒரு கருத்தரங்கை நடத்துவதெனத் தீர்மானித்தது.

கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளர், பேச்சாளர் என்னும் அளவில், எவரையுமே அழைக்காமல், தமிழின எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட அனைவருமே கூடி, அதன் எதிர்கால உறுதிப்பாட்டிற்கென ஒரு தீர்மானமாக இறுதி முடிவு ஒன்றை, உறுதி செய்வதென்றும், அதையே கழகம் எதிர்காலச் செயல் நடவடிக்கையாக மேற்கொள்வதென்றும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செயல் மேனிலைக் குழு தீர்மானித்தது.

குறிப்பிடப் பெற்ற இரண்டு நாள்களிலும், சென்னை நடுவிடத்தில், வரலாற்றுச் சிறப்புடைய இக் கருத்தரங்கம் நடக்கும்,

இக் கருத்தரங்கில் அனைவரும் பங்கு கொள்ளலாம். அனைவருமே முன்னிசைவு பெற்றுக் கொண்டு பேசலாம். இறுதியில் பார்வையாளர்கள் நடுவில், ஓர் ஒப்போலைப் பதிவு' நடைபெறும். அதன் முடிவு இரண்டாம் நாள் கருத்தரங்கின் முடிவில் கருத்தரங்கின் ஒரே தீர்மானமாக நிறைவேற்றப்பெறும்.

கருத்தரங்கில் தம் முடிவான கருத்துகளை எடுத்துக்கூற விரும்புவோர்கள் முன்னமேயே, முதல்வர்க்கு எழுதித் தம் பெயர்களைப் 'பதிவு' செய்துகொள்ள வேண்டுகிறோம்.

கருத்தரங்குக்கு ஏராளமான பொருளுதவி தேவை. அதைத் தமிழின நலத்தில் நாட்டங் கொண்ட செல்வர்கள், பொதுநல உணர்வுடையவர்கள், ஆர்வலர்கள், அன்பர்கள் அனைவரும் உ. த. மு. க.வின் முதல்வர் பெருஞ்சித்திரனார் அவர்களின் பெயருக்கு நன்கொடையாகப் பண விடை, வரைவோலை, காசோலை வழியாக அனுப்பி வைக்கலாம். நன்கொடைப் பற்றுமுறி எதுவும் தேவையில்லை.

"தமிழ் நில"த்தில் நன்கொடையாளர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

அன்பர்கள் இன்றே நன்கொடை அனுப்பத் தொடங்குங்கள். பிற விளக்கங்கள் பின்னர் வரும்!

கழக முதல்வர் உ. த. மு. க.,

பெருஞ்சித்திரனார்,

மே/பா. தென்மொழி, சென்னை - 5.

கேள்வி: 12. (கடந்த 9-8-86-இல் நடந்த தஞ்சைக் கருத்தரங்கின் பொழுது கேட்கப்பெற்ற வினா.)

தாங்கள் ஈரோடு பேராசிரியர் மேல் தொடுத்த அவதூறு வழக்கில் அவர் வென்றதாகவும், தாங்கள் தோல்வியுற்றதாகவும், எனவே, 'மெய் வென்றது, பொய் தோற்றது' என்றும் அவர் கூறியும் எழுதியும் வருவதாகத் தெரிகிறது. உண்மையில் வழக்கு என்னானது ?

விடை: வெற்றிக்கும், தோல்விக்குமே இடமில்லாத பொழுது மெய் வென்றதென்பதோ, பொய் தோற்பதென்பதோ எப்படி? எதிர்பாராதவகையில் தமக்குக்கிடைத்த ஓர் இடுக்கு வாய்ப்பில் கால் வைத்துக் கொண்டு, தாம் பிடித்துக் கொண்டு நிற்பது மெய் என்பதை மெய்ப்பித்துவிடத் துடிக்கிறார், எட்டப்பர்! உண்மை இதுதான்:

நாம் தொடுத்த வழக்கு உசாவலெல்லாம் முடிந்து வழக்கறிஞர்களின் தருக்கவுரையும், தீர்ப்புரையும் எச்சமாக இருந்த தறுவாயில், நம் மலேசியச் செலவு தொடங்கவிருந்தது. அதன் கடுமையான புறப்பாட்டு முயற்சிக்கிடையில், நம் வழக்கறிஞரை மேற்கொண்டு வழக்கைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டும், நடுவரிடம் வாயிசைவு பெற்றுக் கொண்டும், வழக்குமன்றம் செல்லாமல் இருந்து விட்டோம், நாம்! வழக்கறிஞரும் அக்கால் கடுமையான அம்மை நோய் கண்டு, மூன்றாவது கேட்பு நாளில் வழக்கு மன்றம் போகத் தவறியிருக்கிறார். இந்த நிலையில் எதிர்பாரா வகையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இதைத்தான் நம் எதிராளர் தமக்கு வெற்றி என்று திரித்துக் கூறித் திரிகிறார் போலும்! பொய் என்றும் வென்றதில்லை; மெய் என்றும் தோற்றதில்லைதான்! ஆனால் பொய் எது, மெய் எது என்பது போகப் போகத்தான் தெரியும். பொறுத்திருங்கள்!

பொய்யே பருவுடம்பாய்ப்
    பொறுமையே கருநெஞ்சாய்
வெய்ய கொடுநினைவே
    வெள்ளறிவாய் வேறுவினை
எய்ய வழியின்றி
    எவரையுமே புறந்தூற்றி
உய்யாமற் போகின்ற
    உலுத்தரையாம் என்செய்கோம்?

இவ்விடத்து நீதிநெறி விளக்கச் செய்யுள் ஒன்றும் நம் நினைவுக்கு வருகிறது. அஃது இது:

அல்லன செய்யினும் ஆகுலம் கூழாக் கொண்(டு)
ஓல்லாதார் வாய்விட் டுலம்புப-வல்லார்
பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்தாங்(கு)
அறிமடம் பூண்டுநிற் பார்!

கேள்வி: 13: (இதுவும் இதைத்தொடரும் சில கேள்விகளும் மலேசியச் செலவின் பொழுது, டேவான் செர்பாகூனுவில் கடந்த 31-5-86-இல் நடந்த நிகழ்ச்சியின் பொழுது கேட்கப் பெற்றவை.)

இந்து மதம் தமிழர் மதமா? (பாவலர். தீப்பொறி பொன்னுசாமி.)

விடை: இந்து மதம் என்று இக்கால் கூறப்பெற்று வருவதுஉண்மையாக ஒரு தனி மதமே இல்லை. ஆரியரின் வேத மதமே அஃதாவது, வைதீக மதமே அண்டை அயல் கடவுள் கொள்கைகளை உட்கவர்தல் செய்து கொண்டு, இந்துமதம் என்னும் பெயரில், நம் மொழி,இனம், பண்பாடு, கலை, மெய்ப்பொருள் கொள்கை - முதலிய அனைத்துக் கூறு களையும் அழித்துக்கொண்டுள்ளது.

நம் மறைமலையடிகளாரும், பாவாணரும் தமிழின மெய் வரலாறு கூறிய பேராசிரியர் பிறரும் தமிழர் மதங்களாகக் கூறுகின்ற சிவனியமும் (சைவமும்), மாலியமும் (வைணவ மும்) கூட தூய தமிழர் மதங்கள் என்று சொல்லிவிடுகின்ற படி இன்றில்லை. இன்றுள்ள தமிழ்மொழி எவ்வாறு கலப் புற்றும், சமசுக்கிருதம் எவ்வாறு தமிழ் மொழியைத் தன்னுள் பெரும் பகுதி கரைத்துக் கொண்டும் உள்ளனவோ, அவ்வாறே தமிழரின் மதங்கள் என்று கூறுகின்ற சிவனியமும் மாலியமும், ஆரியக் கலப்புற்றும், ஆரியரின் மதமான வேத (வைதீக) மதம் அவற்றைத் தன்னுள் கரைத்துக் கொண்டும் திக்குத்திசை தெரியாமல் மயங்கிக் கிடக்கின்றன.

தூய தமிழ் முயற்சி போல், தூய மத முயற்சியும் தமிழர் இனிமேல்தான் செய்ய வேண்டும். அதற்கு முன் நமக்கு ஒரு மதம் தேவையா என்பதை முடிவு செய்து கொள்வது நல்லது.

கேள்வி 14: இந்து மதம் தமிழினத்தைச் சிதைக்கின்றதா? ஆமாம் என்றால் எப்படி ?

விடை : இந்துமதம் தமிழினத்தை ஏற்கனவே பெரும்பகுதி சிதைத்து அழித்து விட்டது. எஞ்சியுள்ள சில கூறுகளைத்தாம் நாம் இன்று தமிழ் மொழி, தமிழினம், தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடுகள், தமிழ் இலக்கியங்கள், தமிழ்நாடு- என்றெல்லாம் கூறி வருகிறோம்.

இந்துமதம், (1) தமிழர்களை முதலில் பிறவி அடிப்படையிலும், பிறகு வருண அடிப்படையிலும், அதன் பிறகு சாதி அடிப்படையிலும் வேறு வேறாகப் பிரித்து, உயர்வு தாழ்வு கற்பித்துச் சிறப்பு இழிவு கூறி, இந்த இனம் என்றென்றுமே முன்னேறாமல் செய்து வருகிறது.

(2) தமிழ முன்னோர்களிடம் முன் இருந்திராத மூடநம்பிக்கைகள், அறியாமைகள், வேற்றுமைகள், இழிவுகள் போன்றவற்றை இந்துமதம் தன்னிடம் கொண்டுள்ள வேதங்கள், தர்ம சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய கருவிகளின் வழியாக என்றென்றும் நிலைபெற்று இருக்குமாறு செய்து வருகிறது. பற்றாக்குறைக்கு மேற்சொன்ன கருத்துக் கருவிகளுடன் இன்றுள்ள அறிவியல் கருவிகளான வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், கல்வி, கலை, ஆட்சி, அதிகாரம் முதலியனவும் இந்துமதத் தலைவர்கள், ஆட்சியாளர்கள் கைகளில் கிடைத்துள்ளன.

இவற்றினின்று அறியாத தமிழர்கள் விடுபடுவதும், அறிந்த தமிழர்கள் அவர்களை விடுவிப்பதும் மிக மிக மிகக் கடினமான செயலாக இருக்கிறது.

(3) இந்துமதம் தனிமாந்தன் ஒருவனின் தன்னம்பிக்கையைத் தகர்த்து, அவன் தன்னறிவைக் கெடுத்து, அவன் தன் முயற்சியைத் தவிர்க்கச் செய்கிறது. இதனால் அவன் என்றென்றைக்குமே தன்னைச் சார்ந்தவரைப் பற்றிக் கொண்டோ, அல்லது தன் மதத்தைப் பற்றிக் கொண்டோ, அதுவும் இல்லையானால் தன் சாதியைப் பற்றிக்கொண்டோ தான் வாழ வேண்டியுள்ளது. இது தனி மாந்தன் ஒருவன் அனைத்து நிலைகளிலும் முன்னேறுவதற்கு இட்டுக் கொண்ட பெரிய தடையாகும். எனவேதான் இங்குள்ள மக்களின் அனைத்து வாழ்வியல், அறிவியல், ஆட்சியியல் கூறுகளும் அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கின்றன.

(4) இந்துமதம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை அளிப்பதில்லை. பெண்களை ஆண்களுக்கு அடிமைகளாகவே கருதுகிறது. பெண்களாகப் பிறந்துவிட்ட நிலையை அஃது இழிவு படுத்துகிறது.

(5) பொருளியல் நிலையில் பொதுவுடைமை, சமவுடைமைக் கோட்பாடுகளை இந்துமதம் ஆதரிப்பதில்லை. இன்னுஞ்சொன்னால் பொருளியல் சமன்பாட்டை அது தவிர்க்கிறது. ஏழ்மைக்கும்

செல்வ நிலைக்கும் அது முன் பிறவிக் கோட்பாட்டைக் காரணம் காட்டிச் சமச்சீர் நிலைக்கு அது தடையிடுகிறது.

(6) அது போலவே உழைப்பவனும் உழைக்காமல் இருப்பனும் இருக்கவேண்டுமென்பதையே அது வலியுறுத்தி, முதலாளியக் கோட்பாட்டுக்கு என்றென்றும் அரண் செய்கிறது. ஆட்சியதிகார நிலைகளைக் கூட அது முன்பிறவிக் கோட்பாட்டுடன் இணைத்துக் குடியரசுக் கோட்பாட்டை அஃது இகழ்கிறது.

(7) மக்களின் வாழ்க்கைக் காலத்தில் பெரும்பங்கை அது மத நடவடிக்கைகளுக்கெனப் பயன்படுத்திப் பொதுவுழைப்பிற்கும், இயற்கை வள உருவாக்கத்திற்கும் எதிரான கோணத்தில் மாந்த முயற்சிகளை அது திசை திருப்புகிறது.

(8) காலத்தையும் முயற்சிகளையும் கட்டுப்படுத்தும் அறிவியல் அல்லாத கோட்பாடுகளை அது வலியுறுத்துகிறது.

(9) மாந்தப் பொதுநலமே அறம் என்று கருதாமல், அவனவன் பிறவி நிலைக்கு உகந்தபடி அவனவன் வாழ்வதே 'தர்மம்' என்னும் மாந்த முன்னேற்றத்திற்குப் பொருந்தாத கோட்பாட்டை அது மக்கள் முன்வைக்கிறது. ஒருவன் தன் பிறவிக்கு மேலான நினைவு கொள்ளவும் முயற்சி செய்வதற்கும் அது தடையாக இருக்கிறது.

(10) மதத் தலைவர்களுக்கே, சமுதாய நிலையில் உள்ள எவருக்கும் மேலான இடத்தைத் தருகிறது. மதத் தலைவர்களைக் கடவுள் நிலைக்கு அஃது உயர்த்தி வைக்கிறது.

(11) இந்துமதம் மக்களை அச்சுறுத்துகிறது; மக்களின் உரிமை உணர்வுகளை நசுக்குகிறது; அவர்களின் தங்கு தடையற்ற அறிவு வளர்ச்சிக்குத் தடையிட்டு, மூடநம்பிக்கைகளை வளர்த்து நிலைப்படுத்துகிறது.

மற்றும் இன்னோரன்ன காரணங்களால் தமிழினத்திற்கு மட்டுமின்றி, மக்கள் இனத்திற்கே இந்துமதம் பொருந்தாத ஒரு கோட்பாடாக இருப்பதை அனைவரும் நன்கு சிந்தித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி-ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்குமேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு கூ௫

காசிற் கில்லை; கந்தற் கில்லை;
மூசுநர் இளங்கை கொட்டி முழக்கி
அகடு வலிக்கும் உகுநகைக் கில்லை;
தகவுப் படுத்துந் தன்னைக் கோற்குத்
தாண்டியும் சுழன்றும் வேண்டிய ஆடுங்
காண்டகு குரக்கின் களிநடம் போல
என்னைக் கல்லா லன்னை
நன்னய வுரைக்கு மன்னாது நெஞ்சே!

பொழிப்புரை:

காசுக்காகவும் இல்லை; கந்தல் துணிகளுக்காகவும் இல்லை (பார்க்கக்) கூடுவோர் இளைய கைகள் தட்டி வரவேற்று, மகிழ்ச்சியால் பேரொலி எழுப்பி வயிறு வலிக்க, உகுக்கின்ற நகை முழக்கத்திற்காகவும் இல்லை; தன்னை நெறிப்படுத்தி இயக்குகின்ற தன் தலைவனின் கையிலுள்ள கோலுக்கு இசைந்தே, அதைத் தாண்டவும் சுழலவும் அவன் விரும்பிய வகையில் எல்லாம் ஆடுகின்ற, காணத்தகுந்த, குரங்கின் களிப்பான நடனத்தைப் போல, என் தலைவனுக்கு அல்லாமல் அன்னையினது அன்பான மெல்லுரைகளுக்குப் பொருந்துவதில்லை என் நெஞ்சம்.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவன் மீது ஆராக் காதல் கொண்ட தலைவி, தன்காதலைத் தன் நெருங்கிய தோழிக்குக் குறிப்பாக உணர்த்தியதாகும் இப்பாடல்.

தெருவில் நடந்த குரங்காட்டத்தைத் தன் இல்லத்தினின்று கண்டு களித்த தலைவி, அருகிருந்த தோழியிடம், அக் குரங்கைக் காட்டி, அது போல்வதே ஆகும் தன் நிலையும் என்று கூறித் தன் தலைவனிடம் தனக்கு இருக்கும் ஈடுபாட்டைப் புலப்படுத்திக் கூறினாள் என்க.

ஈண்டு இத் தெருவிலாடும் இக்குரங்கு, காசுக்காகவும் ஆடவில்லை, வேடிக்கை பார்க்கின்றவர்கள் கொடுக்கும் கந்தல் துணிகளுக்காகவும் ஆடவில்லை, அல்லது அங்குக் கூடியுள்ள சிறுவர்கள்

குரங்கின் வேடிக்கைகளைப் பார்த்துக் கைகளைத்தட்டி மகிழ்ந்து ஆரவாரம் செய்து எழுப்புகின்றவர்களின் சிரிப்பொலிக்காகவும் ஆடவில்லை. தன்னை அவ்வாறெல்லாம் பழக்கி, ஆட்டுவிக்கின்ற தன் தலைவனிடம் இருக்கிற கைக்கோலுக்காகவே அதைத் தாண்டியும் அதை வைத்துக்கொண்டு சுழன்றும் அவன்விரும்பிய வாறெல்லாம் எல்லாரும் காணத்தகுந்த மகிழ்வான நடனத்தை ஆடிக் காட்டுகின்றது.

தானும் அப்படித்தான்; தன் தலைவன் தன்னை அன்பால் பழக்கிக் காதல் என்னும் உணர்வால் ஆட்டுவிக்கின்றான். எனவே தன் தாய் தன்னிடம் நயமாக உரைக்கும் பிற உரைகளுக்கோ, அவர்கள் தனக்கு உணவும் உடையும் தந்து மகிழ்ந்து புரக்கின்ற அன்புணர்வுக்கோ தான் கட்டுப்பட வியலவில்லை. என்று தோழி யிடம் தன் தலைவனிடம் தனக்குள்ள ஆழமான காதலை உணர்த் திக் கூறியதாகும் இப்பாடல்.

காசிற்கில்லை கந்தற்கு இல்லை: குரங்காட்டியின் கையிலுள்ள குரங்கு மக்கள் கொடுக்கும் காசுக்கோ, அல்லது அவர்கள்கொடுக் கும் கந்தல் துணிக்கோ ஆடுவதில்லை.

அதுபோல் தானும், தன் பெற்றோரோஅல்லது தன்னை மணம் செய்துகொள்ள விரும்புவான் வேண்டி வருவோனோ தனக்குப் பொருள் நலமும் உடைநலமும் கொடுப்பினும், தன் உள்ளம் அவற்றை நாடி அவர்களுக்குக் கட்டுப்பட்டு இயங்குவதில்லை என்றாள் என்க.

மூசுநர்...... இல்லை: குரங்காட்டத்தைப் பார்க்கக் கூடியிருப்ப வர்களுள் இளையோர் தம் கைகளை மகிழ்ச்சியால் கொட்டி, வயிறு கள் வலிக்கும்படி சிரிக்கின்ற பேரொலிக்காகவும், அக் குரங்கு மகிழ்ந்தோ அரண்டோ ஆடவில்லை.

அதுபோல், தன் பெற்றோரும் மற்றோரும் தன் அகவையை யும் அழகையும், நடைமுறைகளையும் பார்த்து மகிழ்ச்சியாலோ அன்றி இகழ்ச்சியாலோ, ஒரு புறம் பாராட்டவும். மறுபுறம் அவர் தூற்றவும் செய்யினும், அவ்வாரவாரங்களுக்காகவும் தான் அவர்கள் வழி நிற்கவும் இயலாது.

தகவுப் படுத்தும் தன்னைக் கோற்கு: அதனைப் பயிற்றி இயக் கும் குரங்காட்டியாகிய அதன் தலைவனின் கையில் உள்ள கோலுக்கு இசைந்தே.

தாண்டியும்...... ஆடும்: தாண்டவும் சுழலவும் ஆக அவன் விரும்பியபடியெல்லாம் ஆடுகின்ற.

காண்டகு குரக்கின் களிநடம் போல; காண்பதற்குகந்த குரங்கினது மகிழ்வான நடனத்தைப் போல

என் ஐக்கு அல்லால், அன்னை நன்னய உரைக்கு: என்

தலைவனின் அன்புரைக்கு அல்லாமல், என் தாயின் நன்மையும் நயன்மையும் சான்ற உரைக்கு

மன்னுது நெஞ்சு: பொருந்தாது என் நெஞ்சம்.

குரங்கானது, தன்னை ஆட்டுவிக்கும் தன் தலைவனது கையிலுள்ள கோலுக்கு இயைந்து நடப்பதைப் போல், யானும் என் தலைவனது காதல் உணர்வுக்குக் கட்டுண்டு நடக்கின்றேன்' என்றாள்.

குரங்கைத் தகவுப் படுத்துவது அவனது கோல், அதுபோல் தலைவியைத் தகவுப்படுத்துவது அவனது காதலன்பு. தகவுப் படுத்துதல், உடன்பட்டு ஒப்ப நடக்கச் செய்தல்.

கோலின் பொருட்டாக அக் குரங்கு தாண்டியும் சுழன்றும் களிநடம் பயில்வது போலத் தலைவியும் தலைவனின் காதற் பொருட்டாக, இல்லந்தாண்டிப் புறத்தே சென்றும், அன்பால் அவனைச் சுழல (சுற்றி) வந்தும், காதல் உணர்வால் களிப்புறக் களவு ஆடியும் வருகின்றதைத் தலைவி தோழிக்குக் குறிப்பாய் உணர்த்தினாள் என்க.

'அன்னையின் உரை நல்லது; நயமானது; எனினும் என் உள்ளத்தே அது பொருந்துவது இல்லை. குரங்கு தன்னைச் சுற்றி யிருப்பவரின் மகிழ்வும் பாராட்டும் நிரம்பிய சிரிப்பொலிக்கு இயையாது தன் தலைவனின் கைகோலுக்கே ஆடுவதுபோல், நானும் என் தலைவனின் காதல் உணர்வாகிய கோலுக்கே இவ் வாறெல்லாம் நடக்க வேண்டி உள்ளது', என்றாள் தலைவி.

குரங்காட்டத்தைப் பார்த்துக் கூட்டத்தில் உள்ள இளவோர் கைகொட்டி நகைப்பது போலத் தன் காதல்-களவு- நடவடிக்கை களையும், தங்களின் அன்புணர்வை அறியாத மூடர் இழித்தும் பழித்தும் அவர் தூற்றுவதைக் குறிப்பாகவும், ஆனாலும் அதைத் தான் பொருட்படுத்தாததை உறுதியாகவும் உணர்த்தினாள் தலைவி என்க.

'மன்னுது நெஞ்சம்' என்ற தன் நெஞ்சம் தலைவனின் அன் பான காதலுணர்வுக்கு மட்டுமே அல்லாமல், பிறர் எவருடைய எவ்வுரையானாலும் அதற்குப் பொருந்தவும் பொருந்தாது, நிலைப் பாடும் எய்தாது என்றும் கூறினாள் என்க.

இனி குரங்கு தன் பெற்றோரையும் பிறந்தவிடத்தையும் விட்டு வெளியேறித் தன் தலைவனின் வாழ்வோடு பொருந்தி வாழ்வதுபோல், தானும் தன் பெற்றோரையும் பிறந்தவிடத்தை யும் விட்டு வெளியேறி தன் தலைவனோடு பொருந்தி வாழவிருக்கும் குறிப்பைத் தலைவி தோழிக்கு உணர்த்தி அறத்தொடு நின்றாள் என்க.

இப்பாடல் குறிஞ்சி என் திணையும் 'தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றல்' என் துறையும் என்க.

ஃ

மொழியியல் அறிஞர் டி. பர்ரோ மறைவு!

1986-ஆம் ஆண்டு சூன் திங்கள் 8-ஆம் நாளன்று மொழியியல் அறிஞர் டி. பர்ரோ மறைந்த செய்தியை அறிய, திராவிட மொழியியலாளர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாவர். பேராசிரியர் ஆர். ஈ. ஆசர் அவர்களின் கடித வழி இந்தியாவின் இப்பகுதிக்கு இச்செய்தி இப்போதுதான் தெரிய வந்தது.

1944 முதல் *1976* முடிய *32* ஆண்டுகள் ஆக்சுபோர்டில் சமசுக்கிருதப்பேராசிரியர கப் பணியாற்றியபோது சமசுக்கிருதத் திலும், திராவிட மொழிகளிலும் அவர் ஆற்றிய திறச்செயல் மிகப்பெரியது. 1984-இல் அமெரிக்க நாட்டு அறிஞர் எம்.பி. எமினேவுடன் சேர்ந்துதொகுத்து வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் திருந்திய பதிப்பு அவர் நினைவை என்றென்றும் அழியாது காக்கும் எச்சமாகும், இராபர்ட் கால்டுவெல்லை அடியொற்றி, முன்னவரின் கருத்துக் கொள்கைகளை உறுதி செய்யத் துணைநின்ற ஏராளமான செய்தி களைத் திரட்டியுள்ளார்.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலையின மொழி களை அளவீடு செய்ததும், அவற்றைத் தமது சொற்பிறப்பியல் அகரமுதலியில் சேர்த்ததும் அறிவுப்பணியில் இடம்பெற்ற மாபெரும் முன்கால் வைப்புகள் எனலாம். திறந்த மனப்போக்கு மற்றும் நுணுக்கமான ஆய்வுப் புலமைக்காகப் பெரிதும் மதிக்கப் பெற்ற அவர் மறைவினால் அறிவுலகத்தில் தோன்றியுள்ள வெற்றிடத்தைப் பல பத்தாண்டுக் கடின உழைப்பின் பின்னரே பிற அறிஞர்களால் நிரப்பிட இயலும்.

இந்திய அறிஞர்கள் பலரால் குறிப்பாகத் தென்னாட்ட வரால் மறை(வேதம்)மற்றும்பிற்கால வேதசமசுகிருதத்தில் திரா விடத்திலிருந்து கடன் பெற்றமை சுட்டிக்காட்டப்பட்ட பொழுது மிகச்சிலரே அதனை ஒத்துக் கொண்டனர். ஆனால் ஆக்சுபோர்டில் இருந்து ஒரு சமசுக்கிருதப்பேராசிரியரும் அதேநிலைமையிலமைந்த அமெரிக்காவைச் சேர்ந்த அறிஞர் ஒருவரும் அஃதாவது எம். பி. எமினேவும் இதைக் கூறியபோது அக்கருத்தை எளிதாகஏற்றனர். மாந்த குலத்தோரால் பேசப்படாத எந்த மொழியும் அண்டை அயலாரிடமிருந்து கடன் பெறாது இருந்தது இல்லை எனலாம். குறைந்த பேச்சு வழக்கால் குறைந்த கடன் வாங்கலுக்கு வழி செய்யும் என்று கூற இயலும்,

1986 சனவரியில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற திராவிட மொழியியலின் அனைத்துலகக் கருத்தரங்கில் பர்ரோ ஒரு கருத் தாய்வரங்கிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருபவராயிருந்தார். ஏனெனில் சொற்பிறப்பியல் அகரமுதலியின் திருந்திய பதிப்பே ஆய்வரங்கின் கருப்பொருளாய் அமைந்திருந்தது. முதுமை,

இந்தியாவின் வெப்பம் ஆகியவை அவர் இங்கு வர இயலாமல் தடுத்துவிட்டன. 1970-இல் இக் கட்டுரையாசிரியர் அவரை ஆக்சு போர்டில் சந்தித்தபோது, அவர் தோழமை உணர்வோடு விருந்தோம்பியமையும் அவருடன் கழித்த அந்த முழுநாளையும் நன்றியோடு நினைவுகூர்கிறார். அறிஞர்கள் அவரைக் கண்டு அளவளாவ விரும்பினர். தமது அணுகு முறையில் முற்று முழுமையான நுணுக்கத்தை அவர் வெளிப்படுத்தினார்.

திராவிட மொழியியல் கழகத்தின் வாணாள் உறுப்பினர் என்பதுடன் சமசுக்கிருதம் பற்றிய நூலொன்றுக்கும் பத்தாண்டுக்கு ஒருமுறை அளித்திடும் அக்கழகத்தின் பரிசினையும் பெற்றிருக்கிறார். திராவிட மொழியியல் கழகமும் அறிஞர் உலகமும் அவர் நினைவைப் பல்லாண்டும் போற்றும்.

—பர். வ. ஐ. சுப்பிரமணியம்

நன்றி : *செய்திமலர் 14-7-86*

(அட்டை 4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று போட்டு ஒரே நொடியில் அங்கு இருக்கும் அனைவரையும் அழித்துவிட வேண்டும் என எண்ணினேன். ஆனால், அ'து என் ஒருவனால் முடியாத செயலன்றோ ?

ஐயா, இன்று சென்னையில் பெரும் பணக்காரர்களாகி இருப்பவர்களில், அதிகம் வடவர்களே. இன்று வாணிக முறையில் இலக்க இலக்கமாகக் கொள்ளை அடிக்கிறார்கள். இன்று பல இடங்களில், அஃதாவது அஞ்சல் அலுவலகங்கள், வங்கிகள், தொலை பேசி அலுவலகங்கள் ஆகிய இடங்களில், முதலில் இந்தியிலும், பிறகு தமிழிலும் பலகையில் எழுதத் தொடங்கிவிட்டார்கள். இதை எல்லாம் பார்க்கும்பொழுது, எனக்கு மிகவும் துன்பமாக உள்ளது.

ஐயா, நாம் வன்முறையில் இறங்கிவிட வேண்டும் என எண்ணுகிறேன். இலங்கையில் நம்மவர்கள் செய்வதுபோல் நாமும் சொந்தநாட்டின் விடுதலைக்காகச் செயல்படவேண்டும் என எண்ணுகிறேன். நாம் பஞ்சாப்காரர்களைப்போல், வடவர்களை அடித்து நொறுக்கினால்தாம் வடவர்கள் ஓடுவார்கள்; நமக்கும் ஒரு வழி பிறக்கும் ! சில நேரங்களில் நான் நினைப்பேன், என் கையில் துமுக்கி கிடைத்தால் (அதுவும்இயந்திரத் துமுக்கி) மிகவும் நுணுக்கமாக ஒரு தடவைசுடுப் பத்து வடவர்களையாவது சுட்டு விழத்திவிட வேண்டும் என எண்ணுவேன். நம் தமிழர்களெல்லாரும் ஒன்று கூடிப் புரட்சி செய்யவேண்டுமென்பது என் அவா.

என்னுடைய கருத்தில் தவறு இருந்தால் மன்னித்து விட வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள் !

இப்படிக்குத்தங்கள்அன்பன், **ச. சாகிர் உசேன்**, சென்னை-23

காலூன்றிவிடும் !

- வள்ளி கேள்வன்

நாம்இந்தியர் என்னும்மொழி நமைத்தாழ்த்திடும் சூதே !
நாம்இந்தியை ஏற்றுப்பயில் நிலையும்பெருந் தீதே!
யாமத்தினைப் பகலேயெனின் யார்ஒப்பிடு வார்சொல் ?
தீமைப்பட ஒவ்வாதுசெந் தமிழ்காத்திடு தோழா !

தெற்கைஇலங் கையிலேதமிழ் இனத்தார்சிதை கின்றார்;
நற்கோயில்இ ராமேச்சுரத் தமிழ்மீனவர் நலிந்தார்;
பொய்க்கேஒரு மைப்பாடெனப் புகல்இந்திய அரசு,
தெற்கேவலி மிகுகாவலைத் தரவேயிலை தமிழா !

என்றும்ஒரு மைப்பாடென ஏய்த்தேஅர சாள்வோர்
என்றும்பிரித் தாளும்திறம் கொண்டேவலி சேர்த்தார்!
பொன்றும்புகழ் மேன்மைக்கென அன்றேஅவர் இந்தி
சண்டிப்பெரு மாட்டைஎழில் மானேஎனப் புனைந்தார் !

தொன்மைப்புகழ் சொல்லின்வளம் பண்பாட்டியல் சேரும்
உண்மைத்தமிழ் மொழிபோல்,அவர் இந்திக்கிலை உடைமை,
கைம்மைமொழி கடன்கொள்வது மறைத்தேதனி முதன்மைத்
தன்மைதர முனைந்தார்வலக் காரங்கொடு நிமிர்ந்தார் !

ஒருநாற்பது போல்ஆண்டுகள் ஓடிச்செலும் வரையில்
புரையேமலி வெறியாட்சியில் அவர்தேசியம் சிதைத்தார் ;
உரிமைக்கெனக் கிளர்ந்தால்அதை வெறியேஎனத் தடுத்தார்
மறைவாய்வட முதலாளிகள் வளம்சேர்த்திட வகுத்தார் !

தொழிலின்வளம் பொருளின்வளம் தென்மாநிலப் பரப்பில்
தளரும்படி கரவேமிக, வடமாநிலம் வளர்த்தார்.
வளரும்மொழி என்றிந்தியை அணைத்தேபல கோடி
உருபாக்களை இறைத்தார்தம(து) இனம்ஆரியம் வளர்த்தார் !

குடிசைப்புறம் தெருவின்புறம் குறைசோற்றினுக் காக
ஓடியும்வணம் உழைக்கும்வறி யவர்பிள்ளைகள் கோடி !
படிப்பென்பதை நினைக்கும்வகை இலையேயவர் வாழ்வு !
தடுக்கும்தடை எதுவோஎனில் வடவோர்மொழிக் கொள்கை !

வரலாற்றினைத் திரிக்கும்"நவ உதயம்"எனும் பள்ளி !
பெருஞ்சிந்தனை மழுக்கும்"நவ உதயம்"எனும் பள்ளி !
அருமாந்தமிழ் அழித்திந்தியை அணைக்கும்கொடும் பள்ளி
வருமோ!வரின் வடவோர்கடைக் காலூன்றிடும் தமிழா !

இருபத்தொராம் நூற்றாண்டினை அடைவோம்எனும் அரசின்
புரட்டேமிகு உரையேதனைப் பொறுத்தால்பெரும் அழிவே !
செரிக்கும்சிறு செயலன்று;தெற் கினத்தாரின்முன் னேற்றம்
அறுக்கும்கொலைத் திட்டம்!அதை அறுக்காதுயர் வில்லை !

சுவிசு தொலைக் காட்சியில் தமிழ் எழுத்துகள்!

கடந்த சூன் 14ஆம் நாளன்று (காரி) சுவிட்சர்லாந்தில் உள்ள பிரான்சு, செருமன், இத்தாலி ஆகிய மொழிகளுக்குரிய (இங்குள்ள மக்கள் இம் மூன்று மொழிகளைத்தாம் பயன்படுத்துகிறார்கள்) ஒளி பரப்பு நிலையங்களில் சுவிசு செருமனி நிலையத்திலிருந்து (Tele vision Swiss German) மாலை 6 மணியளவில் ஒளிபரப்பான ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க நேரிட்டது. அந் நிகழ்ச்சியில் தமிழர் ஒருவர் (இலங்கையைச் சேர்ந்தவர்) கரும் பலகைக்கு அருகேயும், நான்கைந்து வெளிநாட்டவர் அவற்றிற்கு எதிரே நாற்காலிகளில் அமர்ந்தும், மிசைமீது சுவடிகளை வைத்திருந்தனர். தமிழ் உயிர் எழுத்துகள் அக் கரும்பலகையில் எழுதப்பெற்றிருந்தன.

நாங்கள் பார்த்த நேரத்தில், அத் தமிழர் 'ஒ, ஓ'-வின் பலுக்கலைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். எனவே, முதலில் இருந்து சொல்லிக் கொடுத்த வகையையும், அதற்கு முன்பு எதனால், எப்படி நிகழ்ச்சியைத் தொடங்கினர் என்பதையும் கவனிக்கத் தவறியதற்கு வருந்தினோம். சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பவர் ஆங்கிலத்தில் அவர்களுக்கு விளக்கம் கொடுத்தார். பிறகு 'ஔ' என்று சொல்லிக் கொடுத்தார். பயிற்சி பெறுபவர்களில் இருவர் பெண்கள்; மூவர் ஆண்கள். பெண்களில் ஒருவர் எழுந்து '**ஔ**'-வின் பலுக்கலை (உச்சரிப்பைக் கேட்டுவிட்டு, 'அ'-உம், 'உ'-உம் சேர்ந்து 'ஔ' என்று பலுக்கல் (உச்சரிப்பு) வருகிறதே என்று செருமனி மொழியில் மற்றவரிடம் சொல்ல, அவர் கரும்பலகையின் அருகே வந்து 'அ'-வையும், 'உ'-வையும் சுட்டிக் காட்டி, இரண்டும் சேர்ந்து 'ஔ' ஆனதா? என்று கேட்டார். அதற்கு அவர், 'அப்படியில்லை, இது 'அவ்' என்று சொல்ல வேண்டும் என்று திருத்தினர்.

பிறகு பாடம் தொடங்குமுன் '**வணக்கம்**' என்ற சொல்லையும், 'நல்ல சுகமா, நல்ல சுகம்' என்ற சொற்களையும் சொல்லிக் கொடுத்திருப்பார் போலிருக்கிறது. எனவே, இருவரை எழுப்பி எதிரெதிரே நிற்கவைத்து, இருவரையும் கைகுவித்து 'வணக்கம்' என்று சொல்லச் செய்தார். அவர்கள். கைகொடுத்துக் கொண்டே '**வணக்கம்**' என்று கூறினர். பிறகு, அத் தமிழர், 'அவ்வாறு சொல்லக்கூடாது, இப்படித்தான் சொல்லவேண்டும்' என்று கை சேர்த்து வணக்கம் காட்ட, அவர்கள் 'ஏன் இப்படி சொல்லக் கூடாது' என்று கேட்டனர். அதற்கு அவர், 'ஒருவர்க்கொருவர் மதிப்பு (மரியாதை) சொல்லும் பொருட்டு, இவ்வாறு கூறும் வழக்கம்தான் அது' என்று விடையளித்தார். தமிழ் சொல்லிக்

வெற்றியைப் படைத்திடுவாய் !

- பாவலர். இளஞ்சித்திரன்.

இவனோ அவனோ எவனும் தம்பி ,
இந்நிலம் மீட்க வரமாட்டான் ! - தன்
இருபெருந் தோள்கள் தரமாட்டான் !

அவனை , இவனைப் பெரிதாய் எண்ணி
அட, ஏன் காலம் கழிக்கின்றாய் ? - அவன்
ஆதர விலை-என விழிக்கின்றாய் ?

அவனுனக் கென்ன கைத்தடி யா ? நீ
அவனை ஏனெதிர் பார்க்கின்றாய் ? - மேல்
அவனுக்குச் சீரைச் சேர்க்கின்றாய் ?

அவலினை நினைத்தோர் உரலினை இடிக்கும்
அழகிய கதையாய் ஆவதுவோ ! - உன்
ஆண்மை இளைத்துச் சாவதுவோ !

அவனவ னுக்கும் அவனவன் கவலை ;
அவன்மடி இருப்பைக் காக்கின்றான் ! - இன
அடிமைத் தனத்தையா பார்க்கின்றான் ?

சவலைப் பயல்கள் அவன்எல் லாரும் ;
தற்குறி களெனத் தெரியாதா ? -அவன்
தகிடு தத்தங்கள் புரியாவா ?

எழுக தம்பி, இதுதான் நேரம் !
இளைஞர் அணியைச் சேர்த்திடுவாய்; - உன்
இனப்போர்ப் பறையை ஆர்த்திடுவாய் !

தொழுக தமிழ்த்தாய் மொழியை, நிலத்தை !
துணிந்து படையை நடத்திடுவாய் ! - வெற்றித்
தோரண வாயில் படைத்திடுவாய் !

கொடுத்தத் தமிழர் வேட்டி, சட்டை அணிந்திருந்தார். கற்றுக் கொள்ள வந்த வெளிநாட்டு ஆண்களும் அப்பொழுது மூட்டி (லுங்கி) அணிந்திருந்தனர் ஒருவர் அதை அணியத் தெரியாத நிலையில், அதை அப்படியே இடுப்பில் வைத்து, இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, 'வணக்கம்' சொல்லமுடியாது தவிக்கையில், தமிழர் அவர்க்குச் சரியாகக் கட்டிவிட்டார். இதன் பிறகு, செருமனியர் ஒருவர் (கற்றுக்கொள்ள வந்தவர்களில்) நீண்டநேரம் செருமனியில் பேசிய பின்பு இந் நிகழ்ச்சி முடிவுற்றது.

செய்தி : சித்திரச் செந்தாழை-ஆறிறைவன்

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்.

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி கஅ.

உறுப்பினர் : வள்ளி, கருப்பனன்

வள் : (இல்லுள் உறக்கம்)

கருப் : (ஒரு கையில் கயிறு, மறு கையில் கத்தியோடு வருகிறான்)

வள் : (அவன் வரும் ஒலி கேட்டு எழுந்து) ஏ ! கரியனே ! இங்கேயே நீ வந்து விட்டாயா ?

கருப் : ஆம், உன்னைத் தேடித்தான் வருகிறேன். வள்ளி எதுவும் பேசாதே ! (கத்தியைக் காட்டி) கண்ணையன் உயிரைப் போக்கிய கத்தி இதுவேதான். நினைவிருக்கட்டும் !

வள் : ('ஓ'வென்று கதற வாயைத் திறக்கிறாள்)

கருப் : நான் முதலிலேயே கூறினேன், ஒலி செய்தல் கூடாதென்று; மறக்காதே. மண்ணுக்குள் போய் விடாதே ! திரும்பவும் நினைவு படுத்துகிறேன். கண்ணையனுடைய நிலையை நினைத்துப் பார்த்துக்கொள்.

வள் : தூய்மையற்ற உள்ளத்தானே, என் உடலை மண் தின்றாலும், உன்னைத் தொட விடமாட்டேன்.

கருப் : ஆகா ! ஆகா ! (சிரிப்பு) உன்னை மண்ணுக்குள் போக விட்டால்தானே ! (இரந்து) வள்ளி, நீ இந்த ஓலைக்குடிலில் இனி இருக்கவேண்டா. உன்னை நான் உயர்ந்த மாடி வீட்டிற்குள் கொண்டு வைப்பேன். வள்ளி நீ என் பக்கத்திற்கு வா ? (கையை நீட்டுகிறான், உறங்கும் கிழவரைக் காலால் உதைக்கிறான்)

கிழவர் : (அலறி எழுந்து) ஆ ! யார் நீ ?

கருப் : அடா, கூறு கெட்டவனே; வள்ளியோடு பேச இரவில் வந்தால், யார் வருவார்? (கிழவர் வாயில் துணியை வைத்து அடைத்து, கயிற்றால் கிழவன் கால்களைக் கட்டிவைக்கிறான்)

வள் : ஆ ? தாத்தா ! (ஒலி எழுப்புகிறாள்)

கருப் : (தன் வாயில் விரலை வைத்துக் காட்டி) சூ! வள்ளி! மூச்சு விடக்கூடாது! (கிழவரையும் தன் வலது கையால் தட்டி) மூச்சு விடக்கூடாது!

வள் : பெண்ணைப் பெருமையாக மதித்த இந்தத் தமிழ்நாட்டில் உன்னைப் போன்ற விலங்கு, மாந்தன் உருவில் உலவுவது தமிழ் நெறிக்கே இழுக்கு.

கருப் : நானும் மதித்துத்தானே வைத்திருக்கிறேன். அதனால் தான் உன்னை என் பக்கம் வரக் கூறுகிறேன். அல்லாக்கால் இப்படியாக உன்னைக் கெஞ்சுவேனா? இழுத்து வரச்சொல்லி யன்றோ கொஞ்சுவேன்.

வள் : சீ! நச்சுப் பாம்பே! சிறுவனிடம் அகப்பட்ட பொன் வண்டு போல, உன்னிடம் நான் அகப்பட்டுக் கொண்டேன்.

கருப் : முன்பும் அப்படித்தான், அகப்பட்டுச் சிறகொடிந்த புரு வானாய்! தப்பினால், பறக்க முடியாதன்றோ? அகப்பட்டுக் கொண்டாய். இனி தப்ப முடியாது. (கர கரவென்றிழுத்து நிலா முற்றத்திற்குக் கொண்டு வருகிறான்) வள்ளி உன் வாழ் விற்கு ஒரு நல்ல வேளை தொடங்குகிறது.

வள் : கெட்டவனே! உன்னால் எனக்கு வரும் நல்வாழ்வு தேவையில்லை. உடலைக் காட்டியா, உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும். உன்னைப்போன்ற முடங்கள் அழிந்தால்தான், இந்த நாட்டில் பெண்கள் நடமாட முடியும்.

கருப் : உடலைக்காட்டி வாழும் பெண்கள் இருக்கும்போது, அதனைக்கண்டு சுவைக்க எழும் ஆண்கள் கூட்டம் இருக்கத்தானே செய்யும். வள்ளி, விற்பவர் இருந்தால், வாங்குவோரும் உண்டல்லவா?

வள் : எல்லோரும் வணிகர் ஆக முடியாதல்லவா?

கருப் : அப்படியானால், நீ!

வள் : வாழ்வதற்கென்று ஒரு நெறியை அமைத்துக்கொண் டவள் நான்!

கருப் : அ்து என்ன நெறியோ?

வள் : ஒருவரையே காதலித்து, அவரையே கணவராக ஏற்று, உரிமையோடு அவரோடு வாழ்வதுதான்!

கருப் : ஐந்து பேரைக் கணவர்களாக ஏற்று வாழ்ந்த, பாஞ் சாலியின் வரலாறு உனக்குத் தெரியுந்தானே?

வள் : பெண்ணை அடிமையாக்கும் வரலாறுகளை இந்த நாட்டில் பரவ விட்டதாலேயே உன்னைப்போன்ற முரடர்கள் உரு

வாகி விட்டார்கள். பெண்களை, ஆண்கள் சுவைக்கும் பொருளாக எண்ணி அடிமையாக்கி விட்டனர்.

கருப் : இப்போது நீ என்ன சொல்கிறாய் ?

வள் : என்னை விட்டு விடுங்கள், அண்ணா !

கருப் ; நான், அண்ணன் இல்லையடி சிட்டே ! (அவளுடைய இடுப்போடு, தன் இரு கையைச் சுற்றி அவளை இழுத்து) பாலும்-தேனும் கலந்த உன் வாயிலூறும் நீரைக் குடிக்கத் துடிக்கும் அத்தான். மின்னல் இடை யுடையவளே ! கரும்புச் சாறே ! கற்கண்டு சுவையே ! வள்ளியே! என்னை நீ அணைத்துக் கொண்டால், உன் வாழ்வு உச்சியில் கொடி கட்டிப் பறக்கும் ! கப்பல் கப்பலாகச் செல்வத்தைக் கொட்டுவேன்.

வள் : நீ என்னை அடைந்து விடலாமென வீண் கனவு காணாதே! கனவில் கண்ட பணம் செலவிற்கு ஆகாது. அஃது போல உன் கனவும், செயலுக்கு வராது.

கருப் : என் உயர்ந்த நிலையை மறந்து உன்னை இழுக்கிறேன்; (அவளைத் தன் பக்கம் இழுக்கிறான்)

வள் : இக்கொடுஞ் செயலைச் செய்வதுதான் உன் உயர்ந்த நிலையின் இலக்கணமோ ? கயமைக் குணத்திற்குப் பெயர் தான் உயர்ந்த நிலையோ ? உன் பணக் கொழுப்பு, பண்பைக் கெடுக்கிறது. உன் நிலைச்செருக்கு என் கற்பைப் பறிக்கத் துடிக்கிறது. நான் ஏழை என்பதால், எதையும் எளிதாகச் செய்துவிடலாம் என்றெண்ணாதே ! கேள், கரியனே ! தமிழரின் அறநெறியை, என் மறச்செயலால் காப்பேன்.

கருப் : கூறு கெட்டவளே, வாழத் தெரியாதவள் நீ. உன்னைக் கெஞ்சுவதால் நீ மிஞ்சுகிறாய். (கற்பழிக்க முயலுகிறான்)

வள் : (அவனுடைய பிடியில் இருந்துகொண்டு) நான் கெஞ்சுகிறேன்; வேண்டாம் அண்ணா வேண்டாம். தமிழர் நெறியில் இல்லாத ஒருபழியைச் சுமத்தி விடாதே. ஒழுங்கிற்கு முதன்மையான இந்தத் தமிழ்நாட்டின் பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைத்து விடாதே, அண்ணா! குற்றமற்ற ஒரு பெண்ணை, உன் வெறிக்கு ஆளாக்கி, உயர் தமிழ்க் கொள்கையைப் பிற நாட்டார் எள்ளும்படி செய்துவிடாதே! முறை பேசும் தமிழ் ஏட்டில் ஓர் அருவருப்பைப் பொறித்திடச் செய்யாதே ! பிறர் பெண்ணை உடன் பிறப்பாக எண்ணும் இந் நாட்டுப் பண்புக்கு நீ ஒரு கொலைஞனாக இருக்கவேண்டா. என்னை நீ ஒன்றுஞ் செய்யாதே. விட்டு விடு. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு இன்னும் வாழ வேண்டும்.

கருப் : நீ சொல்லுவதெல்லாம், கையாலாகாதவன் கட்டி வைத்த ஒட்டு வரலாறு !

வள் : அண்ணு ! தமிழ்ப் பெண்ணின் ஒழுக்கம், மயிர் விழ உயிர் விடும் கவரி மானுக்கு ஒப்பாகும். ஏன், ஆணுக்கும் அ’து உண்டு.

கருப் : (நீண்ட சிரிப்பு. பிடித்து இழுத்து) உன்னைக் கெஞ்சிப் பார்த்தேன். என் நெஞ்சோடு அணைத்துப் பார்த்தேன். நீ என்னை மிஞ்சுகிருய். இனி உன்னை விடுவதாய் இல்லை, உன் விளக்கங்கள் எனக்கெதற்கு ? (பிடித்துக் கற்பழிக்க முயலுகிருன்)

வள் : விட்டு விடு !...விட்டு விடு ?

கிழ : (துடித்து எழுந்து) என்னம்மா வள்ளி !

வள் ? (கண் விழித்து, தான் இதுவரை கண்டது கனவு என்று உணர்ந்து) கனவு, தாத்தா !

கிழ : என்ன கனவு வள்ளி ?

: தாத்தா, நான் உங்களிடம் முன்பே சொல்லவில்லை. கேளுங்கள்; நானும், அத்தானும் தனித்திருந்தோம் அங்கு கண்ணையனும், கருப்பனனும் வந்து அத்தாேைடு சண்டை போட்டனர், கருப்பனன் அத்தானைக் குறி வைத்துக் கட்டாரியை எறிந்தான். குறி தவறிக் கண்ணையனுடைய நெஞ்சாங் குலையில் பாய்ந்தது; அவன் இறந்தான். அத்தான் என்னை இங்குக் கொண்டுவந்து விட்டு விட்டுப் போய் விட்டார் என்று, அந் நினைப்பிலே உறங்கினேன். அச்ச உணர்ச்சியால் இப்படி ஒரு கனவை நான் கண்டேன். அஞ்சிவிட்டேன்.

கிழ : பார்த்தாயா ! நான் அப்பொழுதே சொன்னேன். நீ யாரையும் காதலிக்க வேண்டாம் என்று; கேட்டாயா ?

வள் : அதனுல் என்ன ! தாத்தா, கருப்பனன்தான் கண்ணையனைக் கொன்ருன், அத்தானுக்கு என்ன ? ஒன்றும் வராது.

கிழ : அ’து இருக்கட்டும், உன் காதலன் இங்கு வருவாஞ ?

வள் : வருவார்.

கிழ : வந்ததும் என்னிடம் தெரிவி. நான் அவனிடம் முழு விளக்கங்களையும் கேட்டு, ஆவன செய்யவேண்டும். சரி, படுத்துக்கொள். விடிய இன்னும் பொழுது உள்ளது.

வள் : சரி. தாத்தா ! (படுத்துக் கொள்ளுகிருள்)

(-தொடரும்)

ஐந்திறம்-ஒரு கருத்தரங்க மதிப்பீடு!

கடவூர். ப. மணிமாறன்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றப் பதினெட்டாவது கருத்தரங்கு 13-6-86-இல் ஈரோடு மாநகரில் தொடங்கியது. அன்று மாலை 'ஐந்திறம்' நூல் வெளிவரக் காரணியமாய் அமைந்த புலவர் வீரபத்திரனார் அவர்கள் பங்கேற்ற கலந்துரையாடலில் தமிழறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு 'ஐந்திறம்' நூலை மதிப்பீடு செய்தனர்.

மயன் என்னும் பழந்தமிழ்ச் சிற்பியால் எழுதப் பெற்ற ஐந்திறத்தைத் தாம் இளம் அகவையிலேயே தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் ஓலைச் சுவடிகள் வாயிலாக அறிந்து மனனம் செய்ததாகவும், இதுபோலவே ஏறக்குறைய பன்னிரண்டு இலக்கம் பாடல்களை மனனம் செய்துள்ளதாகவும் புலவர் வீரபத்திரனார் கூறியது அவையை வியப்பில் ஆழ்த்தியது.

தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்வி இயக்கம் இதுவரை பதிவு நாடாச் சுருள் வாயிலாக இரண்டு இலக்கம் பாடல்களைப் பதிவு செய்துள்ளதாகவும், எஞ்சிய பாடல்களைப் பதிவு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மாண்புமிகு கல்வியமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் அது போழ்து குறிப்பிட்டார்கள்.

வேற்று மொழிச் சொற்கள் சிறிதும் கலவாத தூய தனித் தமிழ் நூல் இதுவென்றும், கட்டடம், ஓவியம், இசை, சிற்பம், நாட்டியம் போன்ற பல கலைகளைப் பற்றிய செய்திகள் இந்நூலில் விரிவாக உள்ளனவென்றும், வேயாமாடம், வீயா மாடம், விண் கலம், மரக்கலம் போன்றவற்றின் வடிவமைப்பு உள்ளிட்ட பல் வேறு செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்றும் புலவர் வீரபத்திரனார் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பொருள் வைப்புமுறை சரியில்லை என்று முன்னாள் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் போன்றோர் கூறியிருப்பினும், முழுத் தூய்மையுடைய ஒரு தமிழ் நூல் இதுவென்றும், தமிழுக்குப் பல அடைகள் (வண்டமிழ், தண்டமிழ் போன்றன) இந்நூலில் பல இடங்களில் இடம் பெறுகின்றன என்றும், எல்லாவற்றையும் நல்ல நடையில் தூய தமிழில் அழகான தொடர்களில் வகையுளி இல்லாமல் எழுத முடியும் என்பதற்கு இந்நூல் சிறந்த எடுத்துக் காட்டென்றும் அனைத்து நிலைகளிலும் அன்னைத் தமிழுக்கு ஆக்கம் தருவது இந்நூல் என்றும் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் யாப்பில் குற்றியலுகரப் புணர்ச்சியிலும் கருத்து வகையிலும் ஓட்டத்திலும் சில குறைபாடுகள் உள்ளதெனினும், முழுமையாக நோக்கின் ''ஐந்திறம் முழுதும் தமிழ்த்திறம்''

என்றும் வரவேற்கத்தக்க பெருமைக்குரியது இந்நூல் என்றும் இதில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லை என்றும் திரு. வ. சுப. அவர்கள் கூறியது நினைவு கூறத்தக்கது.

பல சொற்களும் சொற்றொடர்களும் இந் நூலில் திரும்பத் திரும்ப வருகின்றன என்றும், அளபெடைகள் பழந்தமிழ்ப் பாடல்களில் உள்ளன போல அதிகமான அளவில் இந்நூலில் இடம்பெறுமை ஐயத்திற்குரியதென்றும் சிலர் குறை கூறினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு. ஆறு அழகப்பன் அவர்கள் இந்நூலின் மூலமான ஓலைச் சுவடிகள் உள்ளனவா என்றும், அவ்வெழுத்துகளின் வரிவடிவம் எவ்வாறிருந்தன என்றும் வினா தொடுத்தார்கள்.

இலக்கியத் தமிழ், இலக்கணத் தமிழ், கல்வெட்டுத் தமிழ் போன்ற அளவு நெறிகளைக்கொண்டு இந்நூலைப் பார்க்கக்கூடாது என்றும், திருமூலர் படைத்த மெய்யுணர்வுத் தமிழ்போல் இந் நூலைக் கலைத்தமிழ், சிற்பத் தமிழ், தொழிற்றமிழ் போன்ற நிலையிலேயே மதிப்பிட வேண்டுமென்றும் பண்டாரகர் தமிழண்ணல் அவர்கள் கருத்துரைத்தார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறைப் பேராசிரியர் பண்டாரகர். செ. வை. சண்முகம் அவர்கள், மொழி நடையை இந்நூலில் முதன்மையாக நோக்காது, கருத்துகள் சிறப்பிடம் பெறுவதையே வியந்து பாராட்டவேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

எண்ணிமை, விண்ணிமை, பண்ணிமை, மண்ணிமை போன்ற விளங்காத சொற்களுக்கும் பொருள் தெரிந்தபிறகே இந் நூலைத் திறனாய்வு செய்யமுடியும் என்று பேராசிரியர் ஆ. சிவ லிங்கனாரும், பழைய நூலாக இருப்பின் இந்நூலில் பல ஓங்காரம் இருக்கமுடியாது என்று பண்டாரகர். சாலை. இளந்திரையனாரும், இந்நூலில் உள்ள நூற்பாக்கள் முறையாகச் செய்திகளைத் தெரிவிக்கின்றனவா என்பது புரியவில்லை என்று பேராசிரியர் திருமழபாடி. ஆறுமுகனாரும் கூறினர்.

செம்மைப் பதிப்பு வெளிவர வேண்டுமென்றும் தமிழிலக்கிய வரிசையில் கம்ப இராமாயணத்திலேயே முதலில் அவையடக்கம் இடம் பெறுகிறது என்றும், பழந்தமிழ் நூல் என்று பேசப்படும் இந்நூலில் அவையடக்கமிருப்பது ஆய்வுக்குரியது என்றும் பேராசிரியர். வளனரசு அவர்கள் தம் கருத்தை விரித்துரைத்தார்.

இறுதியில், புலவர். வீரபத்திரனார் அவர்கள் அவையோர் எழுப்பிய வினாக்களுக்கும், ஐயங்களுக்கும் தக்க விடையளித்து, உரையாற்றியதோடு கருத்தரங்கம் நிறைவுபெற்றது. 0

சாதி

(ஆசிரியர் குறிப்பு: இது புதுச்சேரியினின்று மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் 'மதி' என்னும் 17-7-1986 7 ஆம் இதழில் வெளிவந்த ஆசிரியவுரைக் கட்டுரையாகும்.

'மதி' என்னும் இவ்விதழ், ஒரு தூய தமிழ் இதழாகும். அரிய ஆய்வுக் கட்டுரைகள், சிறந்த துணுக்குச் செய்திகள் முதலியவற்றைக் கொண்டு இயங்கும் இவ்விதழ், தூய தமிழ் வளர்ச்சிக்கும், இன எழுச்சிக்கும், நாட்டு விடுதலைக்கும் நம் கருத்துகளுடன் இணைந்து பாடுபட்டு வருவது நமக்குப் பெருமகிழ்ச்சியளிக்கிறது. தமிழினத் தொண்டியக்க வெளியீடாக வரும் இவ்விதழின் ஆசிரியர்கள் திருவாளர்கள்; மு. துரை, ஆ. நக்கீரன் ஆவார்கள்.

இதன் தனிப்படி விலை உருபா ஒன்று. முகவரி: ஆசிரியர், 'மதி' 'தமிழினத் தொண்டியக்கம்', 13, மாரியம்மன் கோயில் தெரு, ஐயன்குடிப்பாளையம், புதுச்சேரி - 605010. ஆண்டுக் கட்டணம் உருபா பன்னிரண்டு.)

சாதி........................

அருமையான தூய தமிழ்ச்சொல்! இச்சொல் உருவாக்கம் பெற்று, நடைமுறைப் படுத்தப்படுகையில் மாசு மருவில்லாத தெளிவான விளக்க அமைப்பில் கூட்டம் (திரள்) என்ற பொருளில் தமிழர்களால் வழங்கப்பெற்றது.

"நாற்றம்" என்னும் சொல், பழங்காலத்தில் நறுமணத்தை மட்டுமே குறித்து வழங்கப்பெற்று, நாளடைவில் தீய மணத்தைக் குறித்து வழங்கி, இன்று "இழிபொருள் பேறு" பெற்றுவிட்ட நிலை போன்றே-கூட்டம் (திரள்) என்னும் கருத்தைக் குறித்து வழங்கிய இச் 'சாதி' என்னும் அப்பழுக்கற்ற சொல்லும், இன்றைக்கு அருவருப்பான விலங்காண்டி உணர்ச்சியில், ஒரு மடயன் அல்லது ஒரு மடக் கூட்டம், தான் அல்லது தாம், தனிப்பட்ட கொடிவழி மரபினன்(ர்) என்னும் வெறிப்புணர்வோடு சூட்டிக்கொண்டு, இழிவு ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டப் பெயரைச் சுட்டும் பொதுக் கொடுஞ் சொல்லாகி இழிவேறிப் பயிலப் பெறுகிறது.

"நீர் வாழ் சாதியும் அது பெறற்குரிய" — "நீர் வாழ் சாதியும் நந்தும் நாகே" என்றவாறுள்ள மிகப் பழைய தொல்காப்பிய நூற்பாக்களுள்ளேயே இந்தச் சாதி என்னும் சொல் கூட்டம் (திரள்) என்னும் பொருளில் மட்டுமே ஆளப்பெற்ற உண்மையைக் காணலாம்.

இவ்வாறு, சாதி என்ற சொல்லுக்கு, இக் காலத்தே வழங்கும் பொருள், அன்று இல்லாதிருந்தது என்று கூறுவதால் — அந்தக்

காலத்தில் அத்தகு உணர்வே நம் தமிழ் மக்களிடம் இல்லை; — பிறர் ஏதோ சூழச்சியால் நம்மீது திணித்தது என்றவாறான பொருள்களில் நாம் இதனைக் கூற வரவில்லை.

சாதி உணர்வே தமிழர்களிடம் முற்காலத்தில் இருந்ததில்லை. ஏனெனில், 'சாதி' என்ற சொல்லே தமிழ்ச்சொல் இல்லை என்பது போலும் விளக்கங்கள், இம் மண்ணில் முழக்கப் பெறுகின்றன ! இவை தவறான கருத்துகளாகும்.

நிற அடிப்படையாக, **வெண்களமன்** , **காராளன்**, **இருளன்** என்றவாறும்; இட அடிப்படையாக, **சோழிய** வெள்ளாளன் **தென்னூர்க்காட்டு** இருளர்; **ஆர்க்காட்டு** முதலி என்றவாறும்; **திசை** அடிப்படையாக, **தென் திசை** வேளாளர் என்றவாறும்; **குடியிருப்பு** அடிப்படையில், **கோட்டை** வேளாளன் **தெருவான்** என்றவாறும்; **உணவு** அடிப்படையாக (சைவ) **சிவனிய** வேளாளன், **புலையன், தவளை தின்னி** என்றவாறாகவும்; **அணிமுறை** அடிப்படையாக **கொண்டை கட்டி**, பச்சைக்குத்தி **வேளாளர், நீறுபூசி** வேளாளர் என்றவாறாகவும், **விற்பனைப் பண்டங்கள்** அடிப்படையாக, **கூல** வாணிகன், **இலை** வாணிகன்; **எண்ணெய்** வாணியன் என்றவாறாகவும்; **கோயில் தொண்டு** அடிப்படையாக **தேவகன்னிகையர், பூவாண்டிப்** பண்டாரம், **உப்பாண்டிப்** பண்டாரம் என்றவாறாகவும்; **கருவிகள்** பயன்படுத்திய அடிப்படையாக **கவண்டன், வலையன், மேளக்காரன், சிறுபாணன், பெரும்பாணன், படையாட்சி** என்றவாறாகவும்; **பண்பு** அடிப்படையாக **மறவன், கள்ளன்** என்றவாறாகவும்; **அலுவல்** அடிப்படையாக, **கணக்கன்** என்றவாறாகவும்; **கல்வி** அடிப்படையாக, **புலவன், பண்டாரம், ஓதுவான்** என்றவாறாகவும்; முன்னோர்பட்ட அடிப்படையாக, **உடையான், முதலி, பிள்ளை, களம்வென்றான்** என்றவாறாகவும்; **சடங்கு** அடிப்படையாக, **பன்னிரண்டு நாள்** போன்றவாறும்; **முறை** அடிப்படையாக, **அம்மாப்** பள்ளர்; **ஆத்தாப்** பள்ளர் என்றவாறாகவும்; **தொகை** அடிப்படையாக, **ஆயிர** வணிகன், **ஐஞ்ஞூற்றான், பாணன்** என்றவாறாகவும்; **விலங்கு வேட்டை** அடிப்படையாக, **வேட்டுவன், நரிக்குறவன், நாயாடி, எருதையாடி** என்றவாறாகவும் கடந்த ஈராயிரம் ஆண்டுகள் காலச் சுழற்சியில் தொடர்ந்து தொடர்கின்ற குலவழி, தொழில் வழிப் பிரிவுகள், இம் மண்ணில் முறிந்தபடியாகவே இயல்பாய் இயங்கினதாம.

இவற்றில் மிகப் பல ஆரிய வருகைக்கு முற்பட்டே இங்கு நிலைத்திருந்தனவாம் ! இவ் வகைக் குலப் பிரிவுகள் எவற்றையும் எந்த ஆரியப் பார்ப்பானும் தனியே உருவாக்கி நிலை நிறுத்தவில்லை. இவற்றைச் செய்தவனும், இயக்கியவனும் அதற்குட்பட்டு இயங்கியவனும் இந்தத் தறுதலைத் தமிழனே !

"பறை பதினெட்டு துளை நூற்றியெட்டு" என்றவாறு (சொலவடை) பழமொழி வரியமைப்பை உண்டாக்கியவனும், அவை உருவாவதற்கு மூல காரணுக இருந்தவனும் இதே தமிழ் முட்டாள்தான் ! இந்தியாவில் (இந்திய நாடாம் இந்திய நாடு !) உள்ள மக்கள் தொகையில் ஏழு விழுக்காடு அளவுள்ள நம் தமிழ்க் குலத்தில் மட்டும் மலே சாதிகளாக 36 பிரிவுகள் அலைகின்றன ! தாழ்த்தப்பட்ட சாதிகளாக 80 பிரிவுகள் அல்லாடுகின்றன ! பிற்பட்ட சாதிகளாக 150 பிரிவுகள் பிய்த்துப் பிளவுற்று இரண்டுங் கெட்டான்களாக இடுக்கணுடுகின்றன ! முற்பட்ட சாதிகளாக 50 பிரிவுகள் முழங்கிக் கிழிக்கின்றன. இப்படியாக 300 பிரிவுகளுக்கும் மேற்பட்ட கழிவுக் கூலங்களாகத் தமிழ்க்கூடு சிதறிச் சீரழிந்து கிடக்கின்றது.

இந்த முந்நூறு பிரிவுகளுள்ளும் அகப்பிரிவுகள், புறப்பிரிவுகள், அகப்புறப் பிரிவுகள், புறப்புறப் பிரிவுகள் பேராளம் பேராளமாகப் பிளவுற்றுப் பீற்றுகின்றன !

மொத்தத்தில் தமிழ்க்குலமே சாதிச் சாய்க்கடையில் தனித் தனிப் புழுக்குலப் பிரிவுகளாகிப் போய்விட்டது. ஒவ்வொரு புழுக் குலமும் தனித்தனி நொதிமச் சேற்றில் தாம் தாம் தோன்றிடுேனு மென்று அறிவியலும்-அரசியலும் பேசுகின்றன !

இந் நிலைகள் இத் தமிழ் மண்ணில் மட்டுமன்றி, இந்த நாவலந்தீவு (இந்தியா) முழுமைக்கும் சொந்தமாகவே இருந்து வருகின்றன.

கன்னடத்தில் சாதியை ஒழிக்கக் கிளம்பிய பன்னிரண்டாம் நூற்றுண்டு **பசவர்** இயக்கத்தவர்கள் இன்றைக்கு **'லிங்காயத்து'** சாதிக்காரர்களாகத் தனித்து நிற்கிறுர்கள். கபீர்தாசு இயக்கம் 15 ஆம் நூற்றுண்டின் இறுதியில் சாதிகளை ஒழிக்க எழுந்து இன்று **'கபீர்பாந்தி'** என்னும் தனிச் சாதியாகித் தனித்து வாழ்கின்றது. "மெய் மட்டுமே கடவுள்; சாதிகள் ஒழியவே வேண்டும்" என்று கடுங் கட்டியங் கூறிக் கிளம்பிய செசீவன்தாசென்னும் அரசபுத்திர (இராசத்தான்) இயக்கத்துக்காரர்கள் அனைவரும் 17 ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து 'சத்தமி' என்னும் சாதிப் பிரிவாகிச் சந்தியில் தனியே நிற்கிறுர்கள். 19 ஆம் நூற்றுண்டின் **ரயிதாசு** இயக்கத்தவர்கள், சாதியை ஒழிக்க முயன்ற சாதியினராகி **சமார்** சாதிக்காரர்களாகத் தனிப்பட்டார்கள். ஆக, சாதியையொழிக்க முனைந்தவர்களே தனிச் சாதிகளாக சாதி முறைகளின் தன்மைகளை அப்படியே கடைப் பிடித்துக் குட்டிச் சுவராகிப் பீறிப் பிளவுற்றியங்கும் காட்சிகளும் களங்களும் இந்த நாட்டில் மிகப்பேராளம் !

தொழில் வழியாகவும், மரபு வழியாகவும், வெறும் பிரிவும் வெறும் பிளவும் உற்று, வெற்று நிலையில் இயங்கிய குலப் பிரிவுகள் அனைத்தையும், பிறப்பு அடிப்படையில் தோன்றிய பிரிவுகளாகக் கட்டுக்கதைவிட்டுப் பொய்ந்நெய்யிட்டுப் போலிப் புனைவாடைகள் உடுத்திப் புழுத்துப் போகுமாறும் நாற்றமெடுத்து நலியுமாறும் செய்த பெருமை இம் மண்ணில் வந்தேறிய ஆரியர்களுடையதே !

இன்னும் மேலும் மேலும் வளர்த்தெடுப்பதில் கண்ணுங் கருத்துமாகச் சூழ்வினைகளில் தொய்யாது ஈடுபடுகின்றனர். 'ஜா' என்ற வடமொழிச் சொல்லுக்குப் பிறப்புக் கருத்து மூலம் இருப்பதை வைத்துக்கொண்டு, 'சாதி' என்ற கூட்டத்திற்கான பொதுத் தமிழ்ச் சொல்லையே 'ஜாதி' என்றவாறு பலுக்கி (உச்சரித்து)த், தங்கள் சூழ்ச்சிக் கருத்துக்கு நிலைப்பாடு கற்பித்தார் ! வெண்ணிறமும் உரத்த கட்டுர இழுப்பும் பறிப்புமான குரலில் அதிர்வெய்திய பண்டையறிவினரும் மதி கலங்கி மருண்டனர் ! சாதி உணர்ச்சியென்னும் கீழ்மைக்கும் கீழாகத் தீண்டாமை, அண்டாமை, காணாமை போன்ற கொடுங் கடிய கீழ்மையுணர்ச்சிகளும் இத் தென்னாட்டில் விளைந்தன. இவற்றின் சாயல்கள் இனனும் சாய்ந்து போய் விடவில்லை !

இத் தமிழகத்திலுள்ள சாதிகளை இன்று கட்டிக் காத்துவரும் மூலக் காவல் நாயாகப் பார்ப்பனீயம் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. அ்து 'இந்து மதம்' என்னும் கற்பனைப் பூதத்தின் இயக்க மூலமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. ஒரு சாதிக்காரன் என்பவன் தனக்குக் கீழாகச் சொல்லப்பட்டு வரும் மற்ற சாதிக்காரர்களுக்கு முன், செம்மாப்பும் - இறுமாப்புங் கொண்டு நடக்கின்றான். தன் சாதிக்கும் உயர்ந்ததாகச் சொல்லப்படும் ..க்காரர்களை அதேபொழுது மேலாக மதிக்கின்றான். ஒவ்வொரு சாதிக்காரனிடமும் இவ்வகைக் கீழ்மைக் குணம் அல்லது தாழ்வு உணர்ச்சி, கருவுணர்ச்சியாக அமைந்துள்ளது. **ஒவ்வொருவனும் தன்னினும் தாழ்ந்த குலம் என்ற பிற குலத்தின் முன் கொள்ளும் ஒருவகைப் பீற்றலான செருக்குணர்வில்தான் சாதியின் நிலைப்பே பெரும்பாலும் கட்டுக் குலையாமல் கிடக்கின்றது.** சாதியமைப்புகளில் மேல்தளத்தில் இவ்வகை இனிப்பு நன்கு மெழுகிப் பூசப்பட்டுக் கிடக்கின்றது. இப் போலிமைப் பூச்சினை நக்கிக் கிடக்கும் நாயாகவே சாதியுணர்வாளன் ஒவ்வொருவனும் வாலாட்டித் திரிகின்றான்.

குமுகாயப் புரட்சியை விளைவிக்கவும், பொதுவுடைமை நிலமாக இத் தமிழகத்தையே தலைகீழாய்ப் புரட்டி நிலைநிறுத்தவும், பகுத்தறிவு நிலமாகவே தமிழகத்தைச் சமைக்கவும் கிளம்பி எழும்பி

யுள்ள இளைஞர்களில் பெரும்பாலோரும் மறைமுகமாகச் சில சூழல்களில் தங்களை அறியாமலேயே வெளிப்படையாகத் தத்தம் பொய்சாதிப் போலிமையுணர்ச்சிகளுக்கு ஆளாகிப் பிதற்றுவதைக் காணலாம்.

திருமணம் செய்துகொள்ளும் பருவம் வரை பகுத்தறிவும், பொதுவுடைமையையும் சாதியொழிப்பும் எழுதிய-கத்திய இளைஞரில் பலர் திருமணம் செய்யும் நேரம் வந்ததும், வாயடங்கிக் கைகட்டி "எல்லாம் பேசலாம்; செயலுக்கு ஒத்து வராது; உலகத்துக்கு ஒத்து வராது" என்று பழங் குப்பையுணர்வுக் கூட்டங்களோடு கூட்டாகிப் போவதையும் நாம் காண்கிறோம்.

பெரும்பாலான புரட்சியுள்ளம் கொண்ட-சாதியுணர்ச்சி ஒழிய வேண்டும் என்ற கடுமையான உணர்வு கொண்ட - இளைஞர்கள் பலரும் சீர்திருத்தத் திருமணம்-திருமண ஒப்பந்தம் என்றவாறான ஏமாற்றுத் தலைப்புகளின் கீழ்ப் பார்ப்பானை மட்டும் ஒதுக்கிவைத்துவிட்டு-சாதியொழிப்பு, பகுத்தறிவு, பொதுவுடைமை போலும் புரட்சிக் கருத்துகளைப் பேசும் வழக்கங்கொண்ட பேச்சாளிகளை அல்லது கவர்ச்சியான அரசியல் தலைவர்களை முன்வைத்துத் தம் சொந்தச் சாதியிலேயே(!) தம் சொந்தக் கொடி வழியிலேயே(!) முறைப்படியான பேரங்களால் முடிந்த மணப் பரிசப் பொருள்கள் சுற்றஞ் சூழ நான்கைந்து (வைதிக) வேதியச் சடங்குகளை மட்டும் தவிர்த்துவிட்டு, மற்ற பிறவெல்லாம் முறைப்படி நடக்கத் தாம் ஏதோ புரட்சி செய்து கிழித்து விட்டதாக உள்ளுணர்வோடு பேசித் திரியும் பீற்றல்களில் ஈடுபடுவதையும் நாம் அடிக்கடி காணுகின்றோம்!

மூடப் பழக்க வழக்கங்களுக்கு ஒருவகையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் நடைமுறையாகவும்-கால வளர்ச்சிக்கு ஓரளவில் இயைந்து போகும் நடைமுறையாகவும் - பகுத்தறிவுக்கு ஓரளவில் இயைபு காட்டும் நடைமுறையாகவும் இதனைக் கொள்ளலாமே தவிர-இதில் மிகப்பெரிய சீர்திருத்தம் இருப்பதாகத் தாமே தவறாக எண்ணி, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளவும் அல்லது உலகத்தை ஏமாற்றவும் கூடாது.

சாதிப் போலிமை யுணர்ச்சியை ஒழிப்பதொன்றே முதலில் செய்யவேண்டியதாகும்! ஒவ்வோர் இளைஞனும், இளைஞையும் இதில் விடாப் பிடியாக இருக்கவேண்டும். நம் முன் தலைமுறையினரை நாம் அப்படியே விடுவோம்! அவர்கள் திருந்தினால் திருந்தட்டும்-கிடந்துழன்றால் உழலட்டும்!

சாதி உணர்ச்சியில் வெறிகொண்டு இயங்கும் தமிழன் ஒவ்வொருவனும், பெரும்பாலும் தன்னல வெறியனாகவும்; பொறாமைச்

காரணுகவும், பிற மாந்தனை அடக்கி ஒடுக்க விரும்பும் செருக்குள்ளவ-ணுகவும், வலியவொருவனுக்கு வால்குழைந்து இயங்கும் நாயுணர் வினணுகவும், ஒவ்வொரு கூட்டுணர்வையும் சிதைத்து அழிக்கும் தீய உணர்வினணுகவும், போலிப் பெருமையில் நாட்டங் கொள்பவ ணுகவும் இருப்பதை, நடப்பதை நன்கு ஊன்றிப் பார்க்கும் பகுத் தறிவான் ஒவ்வொருவனும் இதைத் தெளிய உணரவேண்டும்.

சாதி உணர்ச்சி ஒருவகை விலங்குணர்ச்சி; சாதியில் ஏதே" ஒரு பெருமை இருப்பதாக எண்ணுவது ஒருவகைக் கடைகெட்ட அறியாமை!

பழம் பேரினமாகிய வீரம் செறிந்த பைந்தமிழ் இனம், வீரலுறறும், விரிசலடைந்து வேறு வேருகி, வீறும் - விழிப்பும் - விடிவும் அற்று, இற்றுக் கிடப்பதற்கு இந்தச் சாதியுணர்ச்சி என் னும் சாய்க்கடைக் கழிவுத் தேக்கமானது பிரிவுக்குப் பிரிவு நாற்றம் எடுத்துக் கிடப்பதற்கே சாதிதான் காரணமாகும்.

இப்படிப்பட்ட கேடுகளையுடைய சாதியை ஒழிக்க வேண்டிப் பல ஆண்டுகளாகப் பேசியும் எழுதியும் வந்த தந்தை பெரியார் அவர்களின் உழைப்புக்குச் சிறிதளவு பயனே கிட்டியது.

எனவே இவற்றை ஒட்டுமொத்தமாகப் புதைத்து மண் பரப்ப வேண்டியது நம் தமிழிளைஞர்களின் அனைவருடைய கடமையுமாகும்.

தமிழிளைஞன் தமிழிளைஞ ஒவ்வொருவரும் இவ்வகை நல்லுணர்வு கொண்டு நம் செந்தமிழினத்தின் பழம்பெரும் வலிவை மீட்போமாக!

சாதி யொழிப்புக்கு ஒரே வழிதான் உள்ளது அது கலப்பு மணம் ஒன்றே! அது தமிழகமெங்கும் மணம் பெற வேண்டும்! அந் நிலையை நம் இனம் பெற வேண்டும்! அதுவே ஓர் இளைஞன் அல்லது ஓர் இளைஞை நம் இனத்திற்கு செய்யும் கடமைகளுள் மூலமான ஒன்ருகும்! அக்கடமையை நேர்மையாகவும் ஒழுக்க மாகவும் பெருமையாகவும் நல்லோர்கள் துணையுடன் நடத்திக் கொள்ள வேண்டும்! அத்தகு திறனும் துணிவும் அன்னேருக்குப் பெருக வேண்டும்!

மீண்டும் கூறுகிறேம்:

சாதியுணர்ச்சி ஒருவகை விலங்குணர்ச்சி.
அஃது ஒரு வகை அறியாமை!
அஃது ஒருவகை முட்டாள்தனம்!

அஃது எவர் உள்ளத்தில் இருந்தாலும் அஃது அழிக்கப்பட வேண்டும்; அவ்வகை அறியாமைக்காரர் திருத்தப்பெற வேண்டி யவர்! அவரால்தான் இனவொற்றுமை கூடாமல் கிடக்கின்றது!

அந்தமான் தமிழர்களின் அச்சம்!

பேராசிரியர், முனைவர் **ந. சஞ்சீவி.**

வங்கக் கடலில் திகழும் தங்கத் தீவுகள் அந்தமான்- நிக்கோபார் தீவுகள், இந்தத் தீவுகளுக்கு இந்த ஆண்டு மே மாதம் நான்காம் பக்கல் போக நேர்ந்தது, அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் மாநிலத் (அந்தமான் நிக்கோபார் தீவுகள் தனிநாடு இல்லை; இந்தியாவின் ஒரு குட்டி மாநிலம்தான்!) தலைநகர் போர்ட் பிளேயர்.

அரை நூற்றாண்டுக் காலமாக இந்திய விடுதலைப் போராட்ட ஈடுபாட்டின் காரணமாக அநதமான் சிறைச்சாலையைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குத் தொடர்ந்து இருந்து வந்தது. 1960-இல் மலேசியாவிற்கு ஒரு முறையும், 1964 இல் சிங்கப்பூருக்கு ஒரு முறையும் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டும் என்ற அழைப்பின் பேரில் போக நேர்ந்தது. அப்பொழுது நான்கு முறை (போகும்போதும், திரும்பும்போதும்) வானூர்தி அந்தமான் தீவுகளின் மேல் பறக்கும்போது பார்க்க நேர்ந்தது. ஆனால் நேரில் பார்க்காத குறை இப்போதுதான் (1986 மே) நிறைவேறியது.

மே மாதம் நான்காம் பக்கல் காலை ஆறு மணி அளவில் சென்னை மீனம்பாக்கத்திலிருந்து போர்ட் பிளேயர்க்கு (Port Blair) வானூர்தி புறப்பட்டது. போயிங் (Boeing) வானூர்தி ஆதலால் இரண்டரை மணி நேரத்தில் போர்ட் பிளேயரில் இறங்க முடிந்தது. பிளேயருக்குச் சென்னையிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் ஒரே நேரத்தில் (காலையில்) வானூர்தி சற்றொப்ப ஒரே தூரத்தை வாரத்தில் மும்முறை கடக்கிறது. துல்லியமாகச் சொன்னால், போர்ட் பிளேயர் கல்கத்தாவிலிருந்து 1255 அயிரமாத்திரி (கி.மீ.) தொலைவிலும் சென்னையிலிருந்து 1190 அ.மா. தொலைவிலும் உள்ளது. இந்தக் கணக்குப்படி, கல்கத்தா போர்ட்பிளேயரைவிட, சென்னை போர்ட் பிளேயர் தான் (சற்று) அருகில் உள்ளது. ஆனால், அந்தமான் தீவுகளில் தமிழர்களைவிட வங்காளிகள்தாம் அதிகம். இதற்கு என்ன காரணங்கள் ?

1. நிலப்படத்தைப் பார்த்தால் உண்மை விளங்கும். போர்ட் பிளேயர் கிட்டதட்ட அந்தமான் தீவுகளின் நடுமத்தில் உள்ளது. ஆனால் அந்தமான் தீவுகளின் தொடக்கம், கல்கத்தாவிற்கும் அலதவிட இரங்கூனுக்கும் மிக அருகில் உள்ளது, இதனால் இந்திரா காந்தியின் ஆட்சியின்போது ஒருமுறை அந்தமான் தீவுகள் மீது பர்மா உரிமை கொண்டாடியதாம்! ஆனால் இந்திராகாந்தி தக்க நடவடிக்கைகளை மின்னல்வேகத்தில் எடுத்தாராம்; அதன் விளைவாக, அந்தமான் தீவுகள் இப்பொழுது இந்தியப் படைத்துறையின் ஒரு பெரும் தளமாக விளங்குகிறது; சிறப்பாகக் கடற்படை வான்படைகளின் தளமாகத் திகழ்கிறது.
2. வங்காள தேசப் பிரிவினை ஏற்பட்டபொழுது ஏராளமான

இந்தியர்கள் மேற்கு வங்கத்திற்குள் ஏதிலிகளாக நுழைந்து பெரும் பொருளியல் சிக்கல்களை உண்டு பண்ணினார்கள், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்தியா முழுவதும் அஞ்சல் கட்டணம் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் தமிழகத்து மக்களும், பரந்த உள்ளத்தோடு அதை ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சூழலில் அக்கால இந்திராகாந்தியின் தலைமையில் இருந்த நடுவண் அரசு அதிகாரிகள் இயற்கையான வடநாட்டுப் பற்றோடு, வங்க ஏதிலிகளை அந்தமானில் வாரி வாரிக் குடியேற்றி இருக்கிறார்கள். ஆனால் அண்மையில் இலங்கை ஏதிலிகள் இதே வாய்ப்பைக் கேட்டபொழுது இந்திய அரசு உறுதியாக மறுத்து விட்டது. இந்தக்குறையை அந்தமான் தமிழர்கள் என்னிடம் நேரில் தெரிவித்தார்கள். இதுபற்றி அந்தமான் தமிழர் ஒருவர் ஒரு சிறுநூலையும் எழுதி அச்சிட்டுள்ளார்.

3. இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை சென்னைக்கும் போர்ட் பிளேயருக்கும் கிழமைக்கு ஒரு முறைகூட வானூர்திப் போக்குவரத்து இல்லை! மாறாகப் பல்லாண்டுகளாகக் கல்கத்தாவிற்கும், போர்ட் பிளேயருக்கும் முறையான வானூர்தித் தொடர்புகள் இருந்தன! மூக்கைச் சுற்றிவளைத்துப் பிடிப்பது போல் தமிழ்நாட்டுத் தமிழர்கள் அப்பொழுது அந்தமான் போக வேண்டுமென்றால் கல்கத்தா போய் அங்கிருந்துதான் போகவேண்டி இருந்தது.

அந்தமான் தீவுகளில் உள்ள மக்கள் தொகை 1981 மக்கள் தொகை கணக்குப்படி, 1,88,254. இந்த உழக்கில் கிழக்கு மேற்கு போல் வங்காளிகள் 40 விழுக்காடு. தமிழர்கள்(கேரளர், ஆந்திரர் உட்பட) 30 விழுக்காடு.எஞ்சி இருக்கும் 25 விழுக்காடு பீகார் முதலிய இந்தி மாநிலங்களிலிருந்து வந்த இந்தி பேசுவோர்.

அந்தமான் தீவின் ஆட்சி நடுவண் அரசின் நேரடி ஆட்சியாகும்! புதுச்சேரியில் உள்ள மக்களாட்சி முறையும்கூட அமைச்சரவை ஆட்சியும் கூட பரந்துபட்ட அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குக் கிடையாது. அதனால் இந்தியின் மேலாளுமை அந்தமானில் அதிகம். இந்தி தெரியாமல் அந்தமானில் வாழ்வது கடினம்; மெத்த கடினம்; அதனால் ஏற்கெனவே 'ஒன்பது பிரிவாய்ப் பிரிந்து கிடக்கும் சிறுபான்மைத் தமிழர்கள் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக் கொள்கிறார்கள். நான் சென்றிருந்தபோது புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக ஏற்கெனவே தமிழர்களுக்கு என்று தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு செயல்பட்ட நிலையும் ஒழிக்கப்படுகிறது என்று ஓலமிட்டார்கள். இந்தியையும், ஆங்கிலத்தையும் மட்டுமே பயிற்சி மொழியாக உயர்நிலைப்பள்ளிகளிலும் புகுத்துகிறார்கள் என்றும், காலப் போக்கில் ஆங்கிலம் கைவிடப்பட்டு இந்தியே அரசோச்சும் என்றும் அந்தமான்தமிழர்களும் அஞ்சுகிறார்கள். அந்தமானில் உள்ள நடுவண் அரசின் கல்வி அதிகாரிகள், இந்திய அரசின் புதிய கல்வித் திட்டத்தைச் சுட்டிக்காட்டி "இனி இந்தியும் ஆங்கிலமும்தான் நடுவண்அரசின் பள்ளிக்கூடங்களிலும் பயிற்சி மொழிகள். உங்கள் தமிழ்நாட்டிலும்தான்!" என்று சிரிக்கிறார்கள்.

தங்களின் வாழ்வெனும் இல்லத்தில் பெருக்கிக் கூட்டி எறிந்த குப்பைகள் கூளங்கள், உண்டு எறிந்த எச்சில் இலைகள் எல்லாம், காலத்தின் கோளாறால், வீசிடும் காற்றில் எங்கெங்கோ பறக்கின்றன; மிதக்கின்றன; தொத்திக் கொண்டு கூக்குரலிடுகின்றன; கொக்கரிக்கின்றன; கும்மாளம் போடுகின்றன. கரடு முரடான பாதையிலே, கழுதையின் வாலிலே கட்டிவிட்ட தகரடப்பாக்கள் அஃது ஓட ஓட எழும் ஓசை கேட்டுக் கெக்கலிக்கும் பிள்ளைகள், இந்த நிலை இத் தமிழ்நாட்டு மக்கள் நிலை !

இந்த நிலையிலும் தமிழ் மக்கள், மொழி, நாடு அதன் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கருதி, உண்மை அன்போடும், அறிவோடும், வாய்மையோடும் போராடி உழைத்து வரும் தங்களின் செயலை எண்ணும்பொழுது, அறியாமை நிறைந்த இம் மக்கள் முன் தங்களின் அரிய செயல், 'குண்டூசி கொண்டு குன்றினைத் தகர்த்தற்போன்றதே' என்று எண்ணவும், அதேபொழுது, நாடானால் என்ன, காடானால் என்ன,

'சூடுவாரை எண்ணிப் பூக்கள் மலர்வதில்லை;
சுவைப்பாரை எண்ணிக் கனிகள் பழுப்பதில்லை;
கேட்பாரை எண்ணிக் குயில்கள் பாடுவதில்லை;
இஃது இயற்கை நிலை'-என எண்ணவும் தோன்றுகிறது.

இந்த நிலையில் நிலைத்து நின்று, அன்றும்-இன்றும் இனி என்றும், அயர்வின்றி உழைத்து வரும் தங்கள் உழைப்பின் பெருமை தமிழ் உள்ளவரை மாறாது; மறையாது! அது நிலமுள்ள வரை நிலவியிருக்கும் தன்மையதே !

சோலைக்குள் நிலவே! காலைக்குயிலே! நீ பாடு, பாடு! பாடிக் கொண்டே இரு ! அன்பன், -அருள்மணி, வெங்காலூர்-21.

0:1158: பகுத்தறிவுத் திலகம், பழந்தமிழ் மொழியின் பான்மைக் காவலர் ஐயா அவர்களுக்குத் தனித்தமிழ்த் தனையன் எழுதும் கடிதம். நான் நலமாய் உள்ளேன் என்று சொல்லித் தங்கள் நலனைப்பற்றி உசாவமாட்டேன். நீர் நலமாய் இருந்தால் தான் இந்தத் தமிழ்நாடும் மொழியும் இனமும் வடமொழி வல்லாளுமையிலிருந்து விடிவுபெற முடியும். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள். ஈடுபடுவீர்கள். தனித் தமிழ்நாட்டைத் தாங்கள் (தென்மொழியில்) ஏற்புப்படுத்தியுள்ளீர்கள். தங்களுடைய கனிச்சாறு தொகுதிகளைப் படித்து வருகிறேன். இந்த நூற்றாண்டு இறுதிக்குள் நாம் தனித்தமிழ்நாட்டை அடைவோமாக. இயற்கை நமக்குத் துணைபுரியட்டும், —**அ. ஆ. இராசாராமன்**, ஆயிப்பேட்டை.

0:1159: மெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய ஐயன்மீர், வணக்கம். தாங்கள் மலேசியச்செலவைப் பெரும்புகழொடு முடித்துக் கொண்டு திரும்பியதைத் '*தமிழ் நிலம்*' வழி அறிந்து பெருமகிழ்ச்சியுற்றேன். தங்களின் அயல்நாட்டுச் செலவு அந்நாட்டு மக்களுக்குப் பெரும்பயன் அளித்திருக்கும் என்பது உறுதி. தங்களின் தமிழ்த் தொண்டு, கடல்கடந்தும் பயன் விளைவிப்பதை அறிந்து பேருவகை அடைகின்றேன்.

தாங்கள் இதுபோலும் பல அயல்நாட்டுச் செலவுகளை எதிர்காலத்திலும் மேற்கொண்டு "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்பதனையும், உ. த. மு. க. - வின் கொள்கைகளுக்கேற்ப உலகத் தமிழினம் ஒன்றுபடும் என்பதனையும் மெய்ப்பிக்க வேண்டுமாய் விழைகின்றேன்.

(அடுத்தப் பக்கம் பார்க்க

தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து பைந்தமிழ்த் தொண்டு புரிய வேண்டுமாய் உள்ளார்ந்து வாழ்த்துகின்றேன்.

— புலவர். ப. **எழில்வாணன்**, க. மு. கல். இ. பள்ளப்பட்டி.

0:1160 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐயா, வணக்கம் பல. தமிழ் நிலமும், தென்மொழியும் உரிய காலத்தில் கிடைக்காது, சோர்வுற்றிருந்த நிலையில், தமிழ்நிலம் இதழ் எண். 73 கிடைக்கப்பெற்றேன். அதன் வழித் தங்களின் இரண்டாம் மலேசியச் சுற்றுச் செலவு இனிதே பயனுருவகையில் அமைந்தது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

தங்களின் உரைகள் முழுவதுமாக ஒலி, ஒளிப் பதிவு செய்யப் பட்டிருப்பது அறிந்து இன்னும் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்ருவது ஒரு நாள் அவற்றின் மூலம் தங்களின் மலையக உரை நிகழ்வுகளைக் கண்டும் கேட்டும் மகிழ வாய்ப்புக் கிட்டுமென்ற அவா தான்.

ஐயா, எப்படியேனும் தமிழ் நிலமும், தென்மொழியும் குறித்த நேரத்தில் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டுகிறேன். பல தொலைகளுக்கிடையில் இந்த இதழ்களுக்கு உறுப்பினர் சேர்க்க முயலும்போது அவர்கள் தயக்கம் காட்டுவதற்குக் கூறும் காரணங்களில் ஒன்று, "அவை காலங்கடந்து வருகின்றன" என்பது. இந்த இதழ்களைப் பரப்புவதற்காகப் படித்தவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்களை அணுகி வேண்டும்போது, அவர்களின் நடத்தை "இவர்கள் தமிழர்கள்தாமா?" என்று வெட்கமுறும் நிலையை ஏற்படுத்துகிறது. அவர்கள் தமிழின் மீது கொஞ்சமும் ஆர்வமின்றியிருப்பது கண்டு வருந்தவேண்டியுள்ளது. அவற்றை விளக்க வேண்டுமானுல் மிகவும் விரியும் என விடுக்கிறேன்.

குன்றளவு முயன்று குன்றிமணியளவு பயன் கிட்டினும் பெரிதென்று எண்ணியே செயல்பட வேண்டியுள்ளது.

தென்மொழியும், தமிழ்ச்சிட்டும், விரைவில் வரவேண்டுகிறேன். நம் இதழ்களைக் குறித்த காலத்தில் காணுதுபோனுல் மிகவும் கவலையாக உள்ளது. இங்ஙனம் தங்கள் அன்புத்தொண்டன்,

—**சீத்தலைச்சாத்தனுர்**, உ. செல்லூர் (தெ.ஆ.)

0:1161 : பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். கடந்த ஒரு திங்களுக்கு மேலாகத் தங்களின் 'தமிழ்நிலம்', 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய தாளிகைகள் வெளி வாராததால், இதையும் ஏதோ இடையூறு விளைவித்து, வராமல் செய்துவிட்டார்களோ என எண்ணி மிகவும் மனம் வருந்தினேன். தென்மொழி, தமிழ்ச்சிட்டைப் பார்த்தவுடன்தான் என் மனம் மகிழ்ச்சியுற்றது.

கடந்த பத்து நாள்களுக்கு முன்னுல், சென்னையில் 'இந்தி ஆதரிப்பு மாநாடு' நடைபெறப் போவதாகச் சுவரொட்டி பார்த்தேன். அதைப் பார்த்ததும் அந்த மாநாட்டில் கலந்துக்கொள்ளப் போகும் அனைவரையும் மிகவும் வலிமை வரய்ந்த் அணுக்குண்டு

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்)